# கரை தேடும் அலைகள்

(சிறுகதைத்தொகுதி)

ஆரபி சிவஞானராஜா

வெளியீடு :
ஸ்கந்தா தமிழ் மன்றம்
2000

# கரை தேடும் அலைகள்

ந. உமாசுதனி
புலமைப்பரிசில்
2007 5ம் ஆண்டு
கட். நெல். ப. நோ. கூ. சங்கம்

ஆக்கம் :
ஆரபி சிவஞானராஜா

வெளியீடு :
ஸ்கந்தா தமிழ் மன்றம்
2000

# கரை தேடும் அலைகள்
# KARAI THEDUM ALAIKAL

ஆக்கம் : ஆரபி சிவஞானராஜா
உயர்தரம் - விஞ்ஞானப்பிரிவு 2000
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை,
சுன்னாகம்.

உரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : தமிழ் மன்றம், ஸ்கந்தா

முதற்பதிப்பு : 2000 புரட்டாதி

விலை : 100/- (நூறு ரூபா)

அச்சுப்பதிப்பு : அச்சகம் --
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.

# அலைகளில்

1) கரை தேடும் அலைகள்

2) அட்டைகள்

3) மணமகன் தேவை

4) கணிப்பீடுகள்

5) கானல் நீர்

6) வெந்து தணிந்த காடுகள்

7) மனிதம் என்றும் மரணிப்பதில்லை

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதல்வர்
## திரு. க. சிவராஜி அவர்களின்

# வாழ்த்துரை

எமது கல்லூரி அன்னையின் தவப்புதல்வி செல்வி ஆரபி சிவஞானராஜாவின் சிறுகதைத்தொகுப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமை கொள்கிறேன்.

1992 முதல் எமது கல்லூரியில் கற்றுவரும் செல்வி ஆரபி இன்று எமது கல்லூரியின் சிரேஷ்ட மாணவத் தலைவியாக விளங்குகிறார். கல்விசார் குடும்பத்தில் கலை ஞான வித்தகருக்கு புதல்வியாக உதித்த இவர் எம் கல்லூரிக்கு பல பரிசில்களைப் பெற்றுத்தந்த வரலாற்று மாணவி. அகில இலங்கை மட்டத்தில் சிறுகதைப்போட்டியில் முதன்மை பெற்று புகழ் கொடி நாட்டியவர். கல்லூரி விழாக்களில் கணீரென்ற குரலில் திருமுறை பாடுவது முதல் முதன்மை அரங்க மாணவியாக விளங்கி பலரது பாராட்டையும் பெற்றவர். பல்கலைக்கழக புகுமுக வகுப்பு மாணவியாகிய ஆரபியின் இலக்கிய ஆர்வத்துக்கு அவரது தாத்தா புலவர் சிற்றம்பலம் உபாத்தியார் முதல் பெற்றோர்கள் பேராதரவு வழங்கி வருகின்றனர். புலமை மிக்க மீத்திறன் மாணவியாகிய செல்வி ஆரபியின் சிறுகதைகள் சில தொகுக்கப்பட்டுள்ளன.

கரைதேடும் அலைகள், அட்டைகள், மணமகன் தேவை, கணிப்பீடுகள், கானல் நீர், வெந்து தணிந்த காடுகள், மனிதம் என்றும் மரணிப்பதில்லை என்ற சிறு கதைகளின் பிரதிகளைப் படித்துப் பார்த்தேன். வியந்தேன். வியப்பூட்டும் வகையில் கற்பனைத் திற னோடு காலச் சூழலை, சமூக வேதனைகளை தன் பாத்திரங்களின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் கன்னிப் படைப்பே கனமான காத்திரப் படைப்பாக வெளிவரு வது மிகவும் பாராட்டுக்குரியது. ஆரபியின் ஆக்கம் இலக்கிய உலகில் பெரும் வரவேற்பைப் பெறும் என் பதில் ஐயமில்லை. அவரது சிறப்புக்களால் ஸ்கந்தாச் சமூகம் பெருமை கொள்கிறது. என் இனிய வாழ்த்துக் களும் ஆசிகளும் உரித்தாகட்டும்.

அதிபர்

யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.
2000 – 07 - 28

உ

சிவமயம்

உடுவில் கோட்டக்கல்வி அலுவலக

உதவிக் கல்விப் பணிப்பாளரின்

# ஆசியுரை

விளையும் பயிரை முளையில் தெரியுமாற் போல், யா / கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் செல்வி. சி. ஆரபி அவர்கள் கல்வி கற்றபோதே பல ஆற்றல்களைக் கண்டு பூரிப்படைந்தேன். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்திபெற்ற இவர், தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியிலே சிறுகதையில் வெற்றி கொண்ட சிறந்த மாணவியாவார். யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் உயர்தர மாணவியாக இருக்கும் போதே " கரைதேடும் அலைகள் " எனும் சிறுகதைத் தொகுப்பினை வெளியிட முன்வந்த செய்தியறிந்து அகம் மகிழ்கின்றேன். அவரது ஆற்றல், திறமை மென் மேலும் செழித்தோங்க வேண்டுமென்று, இறைவனை வேண்டி நல்லாசிகளை வழங்கிக் கொள்கின்றேன்.

திரு. அ. தற்பரானந்தன் J. P.

உதவிக் கல்விப்பணிப்பாளர்
கோட்டக்கல்வி அலுவலகம்,
உடுவில்
2000 - 08 - 22

செஞ்சொற் செல்வர்

## ஆறு. திருமுருகன் பி. ஏ. அவர்களின்

# ஆசியுரை

எனது அருமை மாணவி செல்வி. ஆரபி சிவஞான ராஜாவின் சிறுகதைத் தொகுப்பு மலருக்கு ஆசிச் செய்தி தருவதில் அகமகிழ்கிறேன். புலமையும் மிகுந்த பணிவும் மிக்க ஆரபி ஸ்கந்தவரோதயாவின் சாதனை மாணவியாக சரித்திரம் படைத்தவர். பல்துறை ஆற்றலும், பலநூறு பரிசுகளும் தன் பாலப்பருவம் முதல், பெற்று பலரது பாராட்டைப் பெற்றவர். அகில இலங்கை ரீதியில் இரு தடவை சிறுகதைத் துறையில் வெற்றியீட்டி அவரது ஆசிரியர்களாகிய எமக்கும் அவரது பெற்றோருக்கும் பெருமை சேர்த்தவர். இலங்கை வானொலியில், சர்வதேச தமிழ்ச்சேவை - வான் வரிசையில் தன் இனிய குரலில் கவிதைகள் வழங்கி கல்லூரிச் சமூகத்தின் பாராட்டைப் பெற்றவர். இவரது படைப்பாக எழுந்த சிறுகதைகளை நூலாக்கி வெளியிட வேண்டும் என்று ஆரபியின் தந்தை எனது இனிய நண்பர் சிவஞானராஜாவிடம் வேண்டுகோள் விடுத்தேன். அதன் பலனைக் காணும் பேறு பெறுகிறேன். ஆரபி தமிழ் உலகுக்கு அழகு சொல்வாள் என்பது என்றோ நாம் அறிந்தது. சொல்விற்பனமும் அவதானமும் கவி சொல்ல வல்ல நல்வித்தையாவும் தரும் கலைவாணியின் திருவடியை வணங்கி - ஆரபியை வாழ்த்தி ஆசீர்வதித்துப் போற்றுகிறேன்.

ஆறு. திருமுருகன்

## தமிழ் மன்றத் தலைவரின்

# வாழ்த்துரை

வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள். அது போல் ஆரபியின் ஆக்கங்களை வாசிக்கும் போது ஆரபியின் எதிர்காலத்தை எண்ணி அக மகிழ்வு அடைவதுண்டு. உயிர்த்துடிப்பு, புதுமை, முற்போக்கு ஆகிய அம்சங்களை ஆரபியின் ஆக்கங்களில் காண முடிந்தது. ஆரபியின் ஆக்கங்கள் நூலுருப்பெற வேண்டும் என எண்ணியதுண்டு. அவ்வெண்ணங்கள் 'கரை தேடும் அலைகள்' எனும் சிறுகதைத் தொகுதி வெளியிடப்படுவதன் மூலம் நிறைவேறுகிறது என்பதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். முற்போக்கு எழுத்தாளர் வரிசையிலே ஆரபியின் பெயரும் இடம்பெறும் என்பதில் ஐயமில்லை. அவரது பணிகள் சிறக்க எனது ஆசிகள்.

நடராசா பவன்
ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி
( B. A. Dip-in-Education )

*14 – 08 – 2000*

# என்னுரை

" ஓங்கு விஞ்ஞானமும் உயர்தரு கலைகளும்
உண்மையில் வளர்தரும் இங்கே "

என்று வித்துவான் சி. ஆறுமுகத்தினால் கனியப் பட்ட வாசகத்திற்கு ஏற்ப என்போன்ற பல மாணவர் களை ஊக்குவித்த பெருமை என் கல்லூரியையே சாரும்.

தமிழ்த்தினப் போட்டி நடைபெறும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் என்னை ஊக்குவித்து வெற்றிபெறச் செய்த மதிப்பிற்குரிய எம் கல்லூரி முதல்வர் திரு. க. சிவாஜி, திரு ஆறு. திருமுருகன், திரு. ந. பவன், திருமதி வி. இலட்சுமணன், திரு. பா. மகாலிங்கசிவம், செல்வி தே. சங்கரப்பிள்ளை, திரு சி. மகேந்திரன், திரு ஆர். ஜோர்ஜ் மற்றும் அனைத்து ஆசிரியர்களை யும் நான் என்றென்றும் தலை வணங்குகின்றேன்.

'கரைதேடும் அலைகள்' ஒவ்வொன்றும் ஒவ் வொரு விதம். சில அமைதியானவை. சில ஆக்ரோஷ மானவை. கரைதேடும் அலைகளின் தேடலை, தாகத்தை, அவை சொல்லவரும் சேதியை இயன்றளவு உங்களுக்குச் சொல்லியிருக்கின்றேன். ஆனாலும் நான் கதாசிரியையும் அல்ல ஓர் நாவலாசிரியையும் அல்ல. என்னாலியன்றளவு மனிதக் கோலங்களை உங்கள் முன் சமர்ப்பித்துள் ளேன். உங்கள் ஆக்கபூர்வமான விமர்சனங்களைத் தந்துதவுமாறும் வேண்டுகின்றேன்.

மேலும் என் தளிர்ப் பருவத்திலிருந்தே கதைகள் சொல்லி என் ஆர்வத்தை தூண்டிய, தெய்வமாகிவிட்ட என் அப்பம்மாவிற்கும், 'கரைதேடும் அலைகள்' வெளி வருவதற்கு உந்துதலாயிருந்த என் அப்பப்பாவிற்கும் எந்நாளும் என் வணக்கங்கள்.

தம்மாலியன்றவரை சிறப்பாக அச்சேற்றித்தந்த சந்நிதியான் ஆச்சிரமத்தைச் சேர்ந்த அச்சகத்தாருக்கும் என் சிறப்பான நன்றி நவிலல்கள். தெய்வமாகிவிட்ட எங்கள் அப்பம்மாவிற்கு கரைதேடும் அலைகளைச் சமர்ப்பித்து நிறைவடைகின்றேன்

**( குறிப்பு :- இக்கதைகளில் வரும் சம்பவங்கள், பாத்திரங்கள் யாவும் கற்பனையே )**

*09 - 08 - 2000*

அன்புடன்

**ஆரபி சிவஞானராஜா**

# [1]

# கரைதேடும் அலைகள்

இடை வேளைக்கான மணி ஒலித்தது. "ரீச்சர், இன்ரேவல் பெல் அடிச்சிட்டுது." கூவினார்கள் என் செல்லச்சிட்டுக்கள். நான் கையிலிருக்கும் புத்தகத்தை எப்போது என்று தங்கள் மணிக்கண்களை உருட்டி உருட்டிப் பார்த்துக் கொண்டார்கள். என் உதடுகளிலும் மெல்லிய புன்னகை அரும்பியது. "சரி, பிள்ளையள் அடுத்த பாடம் சந்திப்போம்." ஓரிரு நிமிடங்களிலே வகுப்பு காலியாயிற்று. நான் குனிந்து ரெக்கோர்ட் புக்கில் மும்முரமாக எழுதிக் கொண்டிருந்தேன்.

'ரீச்சர், ரீச்சர்' தளிர்க் குரல். நிமிர்ந்து பார்த்தேன். நேற்றுத்தான் புதிதாக வகுப்பில் சேர்ந்திருக்கும் திவ்யா. "ரீச்சர், ...... வந்து ...... என்றிழுக்க "என்னம்மா, பயப்பிடாமல் சொல்லு. யாரேனும் உன்னோட சண்டை பிடிச்சவையே?"

இல்லை என்று அவசரமாகத் தலையாட்டியவள் ''நான் ஒண்டுசொன்னா கோவிக்க மாட்டியளே' என்று பயந்து கேட்டவிதம் சிரிப்பை உண்டாக்கிய போதும் இல்லை என்று தலையாட்டினேன். நீங்கள் நல்ல வடிவு ரீச்சர். இன்றைக்கு எங்கட வீட்ட ஒருறோசாப் பூ பூத்தது உங்களுக்கென்று கொண்டு வந்தனான் காலை தரப் பயமா இருந் தது.'' என்று வெம்மையால் சிறிது வாடிப் போயிருந்த பூவை நீட்டினாள். வாங்கிக் கிளிப் பினுள் செருகிக் கொண்டேன். பூரித்து குழந்தை யின் கன்னத்தில் தட்டிவிட்டு ஸ்டாவ் ரூமை நோக்கி நடந்தேன்.

படியில் கால் வைக்கும்போது பேச்சுக்குரல்கள் நின்றதிலிருந்து என்னைப்பற்றிய விவாதம்தான் இவ்வளவு நேரமும் நடந்திருக்கிறதென்பதை அறிந்து கொண்டேன். உணர்ச்சிகளைக் காட்டாத விறைப்பான முகத்துடன் உள்ளே சென்று கொப்பி களை வைத்து விட்டு, ''நந்தினி ரீ குடிக்க வாறியே?'' என்றேன் சன்னமான குரலில். மௌன மாக எழுந்து வந்தாள். கன்ரீனை நோக்கி நடந் தோம். படபடவெனப் பொரியத் தொடங்கினாள் நந்தினி உன்னைப் பற்றி என்னவெல்லாம் சொல் லிப் போட்டினம் உதி. இவையெல்லாம் பிள்ளை யளுக்கு என்னத்தைப் படிப்பிச்சுக் கிழிக்கப் போயினம்? ஒவ்வொரு முறையும் உனக்கு வாற புறப்போஸ் குழம்புறது இவையளுக்கு எப்பிடித் தெரியுமோ தெரியாது. அதிலும் கல்யாணி ரீச்சர் தனக்கும் பொம்பிளைப் பிள்ளையள் இருக்கிற

தென்பதையே மறந்து விட்டு, உனக்கேதோ லவ் பிறேக் அது, இதென்று அவள் முடிக்குமுன்னே நான் போதும் என்று கையசைக்க 'இல்லை, நான் இன்றைக்கு முழுக்க உன்னட்டச் சொன்னால் தான் மனம் ஆறும்' என்றவள் ரீயிற்கும்,வடைக்கும் ஓடர் பண்ணி விட்டு கன்ரீனின் ஆரவாரமற்ற மூலைக்கு என்னை இழுத்துச் சென்றாள்,

அவையின்ற குணம் தெரியும் தானே? என்றேன். உதயா, அவைக்கு உன்னைத் தெரியாமலிருக்கலாம். ஆனா உன்னோட சின்ன வயதில இருந்தே ஒன்றாய்ப் படிச்சு, விளையாடின எனக்கும் உன்னைத் தெரியாதே? படிக்கிற காலம் தொடக்கம் எத்தினை பேர் உனக்குப் பின்னாலே திரிந்தவை? நீ யாருக்காவது ஓமெண்டிருப்பியே? ஒன்றிலயும் ஒட்டாமல் வாழுற உன்னைப்போய்'' என்றவளை நட்போடு பார்த்தேன். இன்னும் ஒரு மாதத்தில மாமியின் மகனை மணம் முடிக்கக் கனடா பயணமாகிறாள். இவளும் போனால் என் பேச்சுத் துணையும் ... ... ...... என்று யோசித்துக் கொண்டிருக்க 'பெல் அடித்தது. இருவரும் வெவ்வேறு திசையில் பிரிந்தோம்.

நந்தினி சொன்னவற்றையெல்லாம் கேட்டு முகத்தைச் சாதாரணமாக வைத்திருந்தாலும் மனமோ கட்டுப்படுத்த இயலாமல் பொங்கிக் கொண்டிருந்தது. இன்றைக்குப் படிப்பிக்க ஏலாது, படபடவென அரைநாள் லீவு எழுதி அதிபரிடம்

கொடுத்துவிட்டு சைக்கிளை உருட்டிக்கொண்டு வளாகத்தைவிட்டு வீதியில் இறங்கினேன்.

கொஞ்சத் தூரம் தான் போயிருப்பேன். தூரத்தில் பவளம் மாமி வருவது தெரிந்தது. இன்றைக்கு நான் தொலைஞ்சன். கடவுளே, உந்த மனிசின்ரை கண்ணில நான் படக்கூடாது என்று நான் வேண்டாத தெய்வங்களை எல்லாம் வேண்ட மனிசி தூரத்திலிருந்தே கையைக் கண்ணின் மேலே வைத்துப் பார்வையைத் தெளிவாக்கியபடி வந்தது. ''அடடா, எங்கட உதயாவே''? என்னையே நான் சபித்தபடி. சைக்கிளாலே இறங்கினேன்.

''ஒரே தலையிடி மாமி, அதான் லீவைப் போட்டிட்டு வீட்டை போவமெண்டு... ... ''
நான் சொல்லிக் கொண்டிருக்க மனிசி என்னை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை பார்த்துக்கொண்டிருந்தது. ''இதென்ன, புதுக்கச்செய்த தோடே?'' காதைத் தடவியபடி கேட்டது. '' இப்ப சம்பளங்களும் கூடத்தானே ''? '' ஐயையோ, இது இமிடேஷன் தோடு மாமி '' என்றேன், அவசரமாக '' அது சரி உதயா இப்ப கடைசியா வந்த புறப்போஸ் என்ன மாதிரி?'' கேள்வியில் இழையோடிய சிறு ஏளனத்தை நான் கவனிக்கத் தயங்கவில்லை. '' புறோக்கர் வந்தாத்தான் தெரியும் '' என்றேன் விட்டேற்றியாக '' நான் ஒன்றைச் சொல்லுறன் பிள்ளை, குறை நினைக்காதே. சம்பளத்தை எடுத்து அப்பிடியே வீட்டுக்கு, வீட்டுக்குக் கொடாமல் பாங்கில உன்ர பேருக்கு போட்டுவை.

இல்லாட்டி குமர் ஒன்று பெருமூச்சு விட்டு, விட்டு உழைச்சுத்தாற நினைப்பே இல்லாமல் வேண்டிக் கொண்டிருப்பினம். கொண்ணனை ஒருக்காக் காணத்தான் வேணும். கொம்மாவும் வருத்தக்காரி ஆறுதலாவாறன்'' ஏதோ பாரம் இறங்கினதுபோல மனிசி விறுவிறென நடக்க இப்ப எனக்கு உண்மை யாகவே நெற்றிப் பொட்டே தெறித்து விடுவது போல தலை இடித்தது.

தொப்பியும் இல்லாமல், குடையும் இல்லா மல் — இன்றைக்கு யாரின்ரை முகத்தில முழிச் சனோ தெரியாது. இரண்டு, மூன்று இடத்தில இறங்கி, சைக்கிளையும் உருட்டிக் கொண்டு நடந்து ''கொய்தயன்ன'' ''எங்க போறது'' பதில் சொல்லிக் களைத்து விட்டேன். செக் பண்ணிறவ னிடத்தில் பாக்கைத்திறந்தபடி நின்றாலோ அவன் ''பேர், பேர் — எங்கு இருக்கிறது'' கேள்விகளைத் தொடர எனக்கு ஐ. சீ யைப் பாரனேடா, மடையா என்று கத்தவேணும் போல ஆத்திரம் வந்தது. சில வழியல் பார்வைகள், முறாய்ப்புப் பார்வைகள், இளிப்புகள் எல்லாம் கடந்து ஏறுவதற்குள் நான் சரியாய்க் களைத்திருந்தேன்.

பிரதான வீதியிலிருந்து கிளைத்த பாதையில் சைக்கிளை இறக்கினேன். மனமோ காலையில் நந்தினி சொன்னதையே வட்டமிட்டுக் கொண்டி ருந்தது. சீ, என்ன மனுஷர் என்று அதிலேயே உழன்று கொண்டிருந்தது. தூரத்தில் வந்து கொண்டிருந்த வயதானவரைத் தவிர வீதியில்

சனப்புழக்கம் இல்லை பத்திரிகைகளில் அடிக்கடி வரும் திருட்டுகள் ஞாபகத்திற்கு வர வேகத்தை அதிகமாக்கினேன். கோணல் சிரிப்போடு என்னை ஊரசியபடியே கடந்த அந்த வயதானவனின் வாயிலிருந்து உதிர்ந்த தகாத வார்த்தைகளோடு கூடிய அவனது அவசரமற்ற அருவெறுக்கத்தக்க செய்கை என்னைத் திக்கிட வைத்தது. இவங்களையெல்லாம்றோட்டில வைச்சுச் சுட்டுத்தள்ள வேணும். என் மனம் மேலும் சூடாகிப் போனது

கொஞ்சத் தூரம் கூடப் போயிருக்க மாட்டேன். அதே வார்த்தை, அதே செய்கையோடு இருபது, இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒருத்தன். எல்லோரும் எங்கே போகிறது எமது சமுதாயம் என்று எழுதுவதற்கெல்லாம் இவைகள்தான் விடைகள் அதிக சட்டுப்பாட்டுக்கள் இருந்து விட்டு மிதமிஞ்சிய சுதந்திரம் கிடைத்ததால் வந்த விளைவுகளை எண்ணியபடி உழக்கும் போதுதான் கஷ்டமாயிருப்பதை உணர்ந்தேன். இவ்வளவு நேரமும் றிம்மில் தான் ஓடியிருக்கின்றேன் உடம்பு தொய்ந்து விடுவது போலிருந்தது. வீடு கிட்டத்தானே, நடந்து போவம் என்றெண்ணி சைக்கிள் கடையில் சைக்கிளைக் கொடுத்துவிட்டு நடந்தேன்.

இதென்ன, ஸ்கூட்டர் வெளியால நிக்குது. இன்றைக்கு அண்ணா வேலைக்குப் போகேல்லையோ? கூப்பிட வாயெடுத்தவள் என்னுடைய பெயர் அடிபடுவதைக் கேட்டு மௌனமானேன். "இவையளுக்கு என்ன பதிலைச் சொல்லப் போறி

யள்? '' அண்ணியின் குரல். இல்லை தயா, இவை சீதனமும வேண்டாம். கல்யாணச் செலவையும் பகிரலாம் என்று சொல்லிப் போட்டினம். இதை யும் செய்யாட்டி நான் தங்கச்சிக்குச் செய்யிற துரோகமல்லோ? என்ற அண்ணாவின் குரலை அப்ப கட்டிக் குடுங்கோ ஸ்ரோக்கில கிடக்கிற மாமியைத் தூக்கிப் பராமரிக்க என்னால ஏலாது. அதுவும் இரண்டு சின்னப் பிள்ளையளை வைச்சுக் கொண்டு என்றவளிடம் ''மெல்லமாய்க் கதையு மேன், அம்மாவின் காதில விழப்போகுது என்ற வனுக்கு சும்மா ஏன் பயந்து சாகிறியள், அவவுக்கு சேர்ந்தாற்போல இரண்டு வார்த்தை பேசத் தெரி யாது நீங்களெண்டால் ''...... என்றாள் அண்ணி. இஞ்ச பாருங்கோப்பா, எங்களுக்கும் இரண்டு பெட்டையள். இப்ப சாதாரணமாய் ஒருத்தனுக் குப் பத்து லட்சம் சீதனம் கேக்கிறாங்கள். இனி இதுகளின்ர காலத்தில என்ன மாதிரியோ தெரி யாது உங்கட சம்பளத்தை அப்பிடியே பாங்கில போட்டிட்டு உதயான்ர சம்பளத்தில சாமாளிச்ச மெண்டால் தான் '' என்றவளை அண்ணாவின் குரல் இடைவெட்டியது. '' சரி, உதயா கேட்டால் என்ன பதிலைச் சொல்லுறது? அது தான் யோசிக் '' '' அவள் எப்பவாவது கேட்டவளே? அப்பிடிக்கேட்டால் அவை வேலையை விட்டுட்டு வெளிநாட்டுக்கு வந்தாத்தான் கலியாணம் என் றவை என்று சொல்லுங்கோ. உங்கட தங்கச்சிக்குத் தான் மண்பற்றுக் கூடவாச்சே. மூச்சுக் காட்டா லிருந்து விடுவாள் '' என்றவள் நீண்ட பெருமூச் சுடன் '' வேண்டாம், வேண்டாமென்ன இதுக்குத்

தேடித்தேடி வருகுது. தங்கைச்சிக்கு ஒன்றைப் பொருத்தலாமென்றால் எவ்வளவு பாடுபடவேண்டியிருக்குது......

காற்றோடு வரும் அண்ணியின் குரலின் மீதியை உள்வாங்கும் நிலையில் நானில்லை. இவ்வளவு நாளும் நடந்த போலிநாடகம் என் கண்முன்னே அம்பலமாயிற்று. உண்மைகள் எப்போதுமே கசப்பானவைதான். அண்ணா, அண்ணி மீது நான் வைத்திருந்த மதிப்பு, மரியாதை எல்லாம் அதலபாதாளத்திற்கிறங்கியது. ஏதோதோன்றவும் வாசலை ஒட்டியிருந்த பக்கவாட்டு அறையை நோக்கினேன். ''நான் இதற்கு என்ன மகளே செய்ய?'' என்ற பார்வையும், கன்னங்களிலே கண்ணீர்க் கோடுகளுமாய் அம்மா. ஓ........ அம்மா இதை நீயும் அறிந்தாயோ? அழவேண்டாம் என்று தலை ஆட்டினேன்.

இப்போதுதான் வந்தது போல செருப்பைச் சத்தமாய்க் கழற்றினேன். அண்ணாவின் மகளின் பெயரைச் சொல்லி அழைத்தேன். எனக்கு எதுவுமே தெரியாது என்பது போல உள்ளே சென்றேன். '' தலையிடி, சாப்பாடு வேண்டாம் '' சுருக்கமாய்ச் சொல்லிவிட்டு மரக்கட்டை போலக் கட்டிலில் விழுந்தேன்.

இவ்வளவு சுயநலமான மனிதர்களும் இருக்கிறார்களா? நினைப்பே கசந்தது. அதுவும் என்ரை அண்ணாவும் சேர்ந்து தான். சின்ன வயதில தன்ர

பங்கு இனிப்பையும் எனக்குத் தந்து. அழுகிற போது என்னை முதுகில் பொதி சுமந்தபடி ஓடி விளையாடிய அதே அண்ணா தான் கல்யாணம்தான் வாழ்க்கை என்றில்லை. ஆனால் வாழ்க்கையின் பிற்பகுதியைக் கழிக்க அன்போடு கூடிய நட்பான துணை அவசியம் என்பதை உணர்ந்தவள் என் ஒன்றுவிட்ட பெரியம்மா ஒற்றை மரமாகவே வாழ்ந்து தன் குறைகளை, நிறைகளைப் பகிர ஆட்களே இல்லாமல் அல்லாடிக் கொண்டிருப் பதையும் நானறிவேன்.

முதன் முதலாக எதிலேயோ தோற்று விட்ட உணர்வு ஏ. எல் படிக்கும் போது பள்ளிக்கூடம் ரியூசன் எல்லாம் என்னைத் துரத்தித் திரிந்த ரமேஷ், சின்னனிலிருந்து ஒன்றாகப் படித்து பள்ளியைவிட்டு விலகிய காலங்களில் அமைதியாக என் சம்மதம் கேட்ட செல்வன் ...... எல்லோரும் என் நினைவில் வந்தார்கள். ஏன்? ...... சாரங்கன், சாரங்கனின் நினைவில் என் இதயம் இப்போது கூடைப் பூப்போலாகி விடுகிறது.

கம்பஸிலதான் சாரங்கனின் பழக்கம் என் னுடைய பஜ்மேட்தான். எனக்கு விளையாட்டுத் தவிர ஏனையவை எல்லாமே அத்துப்படி சாரங்க னுக்கு விளையாட்டுடன் எல்லாமே 'அத்துப்படி சுருக்கமாக சகலகலாவல்லவன் சாரங்கன் மீதான என் ஈர்ப்பிற்கு இதுதான் முதற்காரணம் சாரங்க னும் என்னை நேசிப்பதைச் செய்கைகள் காட்டின. எனக்கு ஒருபக்கம் வலுசந்தோஷம் மறுபக்கமோ

சரியான பயம். நாள் நகர்ந்தது. கடைசி வருஷம் வெளிக்கிடுகிற காலத்தில வந்து என்ரை விருப் பத்தைக் கேட்டார்.

நான் ஒரு விசரி. சரியான விசரி. ஜாதி, அந் தஸ்து, குடும்ப கௌரவம், அன்புக்குரிய? அண் ணாவின் தலைகுனிவு, குடும்ப கௌரவம் எல் லாமே பூச்சாண்டி காட்ட, என் மனம் சாரங் கனிடத்திலே முற்றாகப் பதிந்த போதும் மறுப் பாகத் தலை அசைத்தேன். அப்போது என் மனம் பட்டபாடு உங்களுக் கெங்கே தெரியப்போகிறது? சாரங்கனுக்குத் தெரிந்து விட்டது. '' உதயா, நீர் யாருக்கும் பயப்படாதேயும் உம்மன்ர மனம் எனக் குத் தெரியும் கொஞ்ச நாளைக்கு இது பெரிய கதையாயிருக்கும். பிறகு பழங்கதையாகி விடும். எத்தினை குடும்பங்களில இது நடந்திருக்கு? பயப் படாதேயும் ''. இப்பிடி என்னென்னவோ எனக் குச் சொன்னார்.

ஆனால் கடைசி வரைக்கும் அதை ஏற்க என்னால் முடியவில்லை: நல்ல பிள்ளை, குணமான பிள்ளை தாய் தேப்பனின்ர சொல்லுக்கு மறு பேச்சில்லாத பிள்ளை, அடக்கமானவள் என்றெல் லாம் என் சமூகம் எனக்கு வரைந்திருந்த வட்டத் தைத் தாண்ட முயன்று, இயலாமல் தோற்று விட்டேன். கடைசிவரை அந்த வரை விலக்கணத் திலிருந்து விலகலுற என்னால் முடியாமலே போய் விட்டது. அதன் பிறகு கம்பஸிலிருந்து விலகும்வரை என்னை எதிர்கொண்ட சாரங்கனின் பார்வையில்

கவிந்திருந்த சோகத்தை நான் மட்டுமே அறிவேன். பிறகென்ன? சாரங்கன் எங்கே? என்ன? ஒன்றுமே எனக்குத் தெரியாது.

என் குடும்பத்திற்காக என் வாழ்க்கையையே தியாகம் பண்ணியதற்கு கிடைத்திருக்கும் பரிசு? இது நிச்சயமாகத் தேவைதான். சாரங்கன் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை. கண்ணிலிருந்து கட்டுப்படுத்த முடியாமல் பெருகும் கண்ணீரை அழுந்த, அழுந்தத் துடைத்துக் கொண்டேன். மனத்துணிவும், வலுவும் இருந்த காலத்திலேயே வேலிகளைத் தாண்ட முடியாத எனக்கு, மன தளவில் அடிபட்டுப் புரையோடிய காயங்களுடன் இருக்கும் இந்நிலையில் மீறமுடியுமா? நான் அம்மாவுக்காகத் தான் வாழப்போகிறேன். அதன் பிறகு என் வாழ்க்கை நிச்சயம் தனிமையில்தான். அண்ணி போகப் போக என்னைப் புரிந்து கொள் ளட்டும்.

மனதிற்குவந்த வாழ்க்கை எனக்கு அமையா விட்டாலும் நான் சுதந்திரமாக வாழ வேண்டும். கண்ணீர்க் கறையைத் துடைத்தவாறே அம்மா விற்கு சாப்பாட்டைக் கொடுக்கச் சென்றேன்.

இனி, கரையைத்தேடி ஆர்ப்பரிக்கும் அலைகள் போல என் பயணமும்... ... ... ...

முற்றும்.

# [2]

## அட்டைகள்

பனிக்காலம், வீடுகளின் கூரைகள், புற்றரைகள் உட்பட எங்கும் பனிப்போர்வை. எதற்காகவோ காணிக்கை கொடுப்பது போல மரங்கள் யாவும் இயற்கைக்கு இலைகளைச் சமர்ப்பித்து வெறுமை யாய் நின்றன. ஒடுங்கிய அறையொன்றில் கிடந்த மூன்று கட்டில்களில் ஒன்றில் காய்ச்சலினால் சுருண்டுபோய்க் கிடந்தான் மதன். ஐந்து நாட்க ளாகக் கண்ணுந் திறக்க முடியாமல் இருந்த அவன் இன்று தான் ஓரளவு தெளிந்திருந்தான்.

வேலைக்குச் செல்ல தேவாவும், நாதனும் வெளிக்கிட்டுக் கொண்டிருந்தார்கள். நாதன் திடீ ரென ஓடி வந்து ''மதன், தங்கச்சியிட்ட இருந்து வண்மினிட் கோல் வந்திருக்கு. ஒரு மணித்தியாலத் தில தந்த நம்பருக்கு கோல் பண்ணட்டாம்'' என்று சொன்னான். கேட்டவுடன் மதனின் உதடு

களில் விரக்திப் புன்னகை நெளிந்தது. " உனக்கு பார்லி கஞ்சி காய்ச்சி மேசைக்கு மேல வைச்சிருக்கு மறக்காமல் குடி '' அவர்கள் சென்று விட்டார்கள். மதனின் உடல் மட்டும் கனடாவிலிருக்க மனமோ யாழ்ப்பாணத்தை நோக்கி விரைந்தது.

சாதாரணமான குடும்பம் என்பதை விட கஷ்டப்பட்ட குடும்பம் என்ற வகையில் தான் அவனது குடும்பம் அடங்கும். அவனது அப்பா அரசாங்க வேலையிலிருந்து மாதாமாதம் சம்பளம் பெறுபவராயிருந்தும் கூட அவர்களது குடும்பம் நல்ல நிலைக்கு வரவில்லை. ஏனெனில் சாராயம், கள்ளு. கசிப்பு எனத் தொடரும் பழக்கங்களில் அவர் ஒன்றைக் கூட விட்டு வைக்கவில்லை. சகலதும் அத்துப்படி, காலை போய் மாலை திரும்பி வரும் போது நிறைவெறியில் வருவார். வந்து பிள்ளைகளுக்கும், தாயிற்கும் அடிகளும், உதைகளும் தான். சில நேரங்களில் கதவுகள் எல்லாவற்றையும் இறுக அடைத்து விட, இவர்கள் மழை பெய்தாலும் கூட வெளியிலேதான் நிற்க வேண்டும். பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் வந்து அப்பாவை சமாதானப் படுத்தி அவர்கள் வீட்டினுள் செல்வதற்கிடையில் வாழ்க்கையே வெறுத்துவிடும். அவனுக்கு பதினாறு பதினேழு வயது வந்தபோது அவன் அவரை எதிர்த்து கதைக்க முற்பட்ட வேளைகளிலெல்லாம் அம்மா போட்ட லட்சுமணக் கோட்டினைத்தாண்ட அவனால் முடியவில்லை. அம்மா அழுதழுதே தன்னைக் கரைத்துக்கொண்டாலும், அடி, உதை வாங்கினாலும்கூட கல்லானாலும் கணவன்,

புல்லானாலும் புருஷனென வாழுபவள். தன் புருஷனுக்கு தலை குனிவு வர விடமாட்டாள். சொந்த. பந்தம் எல்லாம் அவரைக்குறை கூறின போதிலும் அவள் தன் புருஷனைத் தாழ்த்திக் கதைக்க விடமாட்டாள்.

இவ்வாறு அவர்களது சீவியம் அல்லாடிக் கொண்டிருந்த போது ஒரு நாள் நேரத்துடனே அப்பா திரும்பி வந்தார். "நான் வேலையை விட்டதால் தொகையாக வரும் காசில் மதனை வெளிநாட்டுக்கு அனுப்பப் போறன்" கேட்டவுடனேயே தாயிற்குக் கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது. "ஐயோ, என்ர பிள்ளையை ஒரிடமும் அனுப்ப வேண்டாம். அவன் என்னோடயே இருக் கட்டும் நான் அவனை விட மாட்...." அடுத்த கணமே அவளது கன்னம் அதிர்ந்தது. அவர் சொன்ன செய்தியை ஜீரணிப்பதா, தாய் மயங்கிச் சரிவதைத் தாங்குவதா என்று தவித்துப்போனான். தன்னுடைய படிப்பினால் தான் குடும்பம் உயர வேண்டுமென வருந்தி வருந்திப் படித்துக்கொண்டிருந்த மதனுக்கு வெளிநாடு போகத்துளியளவும் விருப்பமில்லை. இன்னும் ஒரிரு மாதத்தில் ரிஸல்ட்ஸ் வந்து விடும். எப்படியும் என்ரனஸ் கிடைக்குமென்பதில் மதன் உறுதியாய் இருந்தான். அதற்கும் அவர் பதில் ரெடியாய் வைத்திருந்தார். "இதுக்குள்ள போய்ப் படிச்சு முடியவே நாலஞ்சு வருசமாய்ப் போகும். பிறகு வேலை கிடைச்சு......அதுக்குள்ள வெளிநாட்டில லட்சம் லட்சமாய் உழைச்சுப்போடலாம்." ஏற்றுக்கொள்ள முடியாத

வாதமாயிருப்பினும் தன் பொருட்டு அம்மாவும், தங்கைகளும்!அனுபவிக்கும் சித்திரவதைகள் காரண மாக அவன் வெளிநாடு போக நிர்ப்பந்திக்கப் பட்டான். எல்லாவற்றையும்விட வசந்தியிடம் எப்படி விடைபெறுவதென்பது புரியவில்லை. இவன் சொல்வதற்கு முன்னரேயே அவள் அறிந்து கொண்டாள். வசந்தி மதனின் உயிரானவள். அவ ளது இரவுகள் கண்ணீரிலேயே கரைந்து விட்ட தால் இவன் முன்னால் அவளுக்குக் கண்ணீரே வரவில்லை விடைபெற்ற நேரத்தை நினைக்க அவனுக்கு நெஞ்சம் கனத்தது.

"வசந்தி, கூடினது நாலு வருஷம். கம்பஸ் தொடங்கினால் நாலு வருஷமும், நாலு நிமிச மாய்ப் பறந்து விடும் பயப்பிடாதேயும்" அவளது உதடுகளில் வரண்ட புன்னகை "மதன், எனக்குச் சொல்லுற மாதிரி உங்களை நீங்களே தேற்றுங்கோ ஏனென்றால் உங்களிலேயே உங்களுக்கு நம்பிக்கை யில்லை." அவசரமாய் "ஏன் வசந்தி அப்பிடிச் சொல்றீர்?" என்று இடைமறித்தவனை "என்ன மதன் சின்னப் பிள்ளையள் மாதிரிக் கதைக்கிறியள்? யாழ்ப்பாண அப்பா, அம்மா பிள்ளையள் வளந்தும் மடியிலே சுமந்து திரியும் போதே சிலபேர் அப்பிடி, இப்பிடி......புதுச்சூழல் புது இடம், பழக்கவழக் கங்கள் .. ஆனா ஒன்று மட்டும் சொல்லுறன் மதன் எனக்குத் துரோகம் மட்டும் செய்து போடா தீங்கோ", அவள் சாதாரணமாகச் சொன்ன போதிலும் உள்ளூர நொறுங்கிப் போயிருப்பதை மதன் அறிவான், "வசந்தி, நான் அப்பிடிப்பட்

டவன் இல்லை. உம்மட மதன் தான் என்று உமக்கு நிருபிக்கின்றேன். அதே மாதிரி நான் போய் உழைச்சுத் தங்கச்சிமாருக்கு கலியாணம் முடிச்சுக் குடுக்கும் வரை நீர் எனக்காக இருக்கவேணும்'' சொன்ன போது அவனது குரல் தளதளத்தது. ''இயற்கை சாட்சியாக நான் உங்களுடையவள் மதன்'' கண்ணிலே அருவி ஊற்றெடுத்தது. கடைசி முறையாகத் தங்கள் மனதிற்குகந்தவர்களை மனம் முழுக்க நிரப்பிக் கொண்டு மௌனமாய்ப் பிரிந்து போனார்கள்.

தங்கைகளிடம் தன்னைப் பற்றி கவலைப் படாமல் கவனமாகப் படிக்கும்படி திரும்பத் திரும்பக் கூறிவிட்டு எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு பயணமானான். கொழும்பில் ஆறு மாதங்கள், ஏஜென்சி மூலம் பயணம். பீப்பாய், நீர்த்தாங்கிகள். காய்கறி மூட்டைகள் எல்லாவற்றிலும் பயணம் செய்து, மொழி படித்து, வேலை எடுத்து நிமிர்வதற்குள் இரண்டு வருஷம் பறந்து விட்டது..

மூன்று தங்கைகளின் திருமணம் பூதாகாரமாய்த் தெரிய வெவ்வேறு இடங்களில் இருநேர வேலை. இடைவேளைகளில் கூட சும்மா இருப்பதில்லை. ஆடம்பரச் செலவுகளே இல்லாமல் தன்னுடைய தேவைகளை எவ்வளவு சுருக்க முடியுமோ சுருக்கிக் கொண்டு, மிகுதி முழுதையும் வீட்டிற்கு அனுப்பி விடுவான். மற்றவர்கள் போல விதவிதமான கோட், சூட்டுடன் காருக்கு முன்னால்

படம் ... ஒன்றுமே மதன் செய்வதில்லை. இவன் எதை எதை அழுத்திச் சொல்லி விட்டு வந்தானோ அதையெல்லாம் அவர்கள் மறந்து விட்டார்கள். அவன் இல்லாதது வீட்டில் ஒரே குழப்பம். அப்பா... படிப்பு விடயம் என்ன அவருக்கு பிள்ளைகளில் கவனம் இல்லை, தாயின் சொல்வழி கேட்காமல் பிள்ளைகள் தாங்கள் நினைத்ததைச் செய்து முடித்தார்கள்.

முதல் தங்கை ஓ. எல். இல் எடுத்த ரிசல்ட்ஸ் மூன்று சீ, எஸ். தங்கச்சி நல்ல ரிசல்ட்ஸ் எடுப்பாளென்று தான் எதிர்பார்த்தான். எல்லாமே அவ்வளவு தான் அதுக்குப் பிறகு எல்லோருமே வண் எஸ், ரூ எஸ் தான். இவனும் படிக்கச் சொல்வதை விட்டு விட்டான். இனி இவளவைக்கு கலியாணம் கட்டிக் குடுக்கிறது தான் தன்ர கடமை என்று கலியாணத்திற்கென்று காசு அனுப்பினான். அரை குறையாயக் கிடந்த வீட்டைக் கட்டி முடித்தார்கள்.

கிளாலிப் பாதை இருக்கும் போது ஒவ்வொரு வருஷமும் அப்பா ரெலிபோனில் கதைக்கக், காசு வேண்ட கொழும்பு வருவார். மகனுடன் கதைக்க வேணுமென்ற ஆசையிலில்லை. கள்ளுக்குப் பதிலாக சாராயம், பிறண்டி வகையறாக்களை ஒரு கை பார்க்க ஒரு பக்கத்தால ரெலிபோன் பில் ஏற, ஏற தங்கிறதுக்கு, செலவளிக்கப் புறம்பாகக் காசு அனுப்பி அவர் திரும்ப ஊர் போவதற்கிடையில் இவனுக்கு வாழ்க்கை வெறுத்து

விடும். பிளேன் ஓடத் தொடங்கிய பிறகே ஐந் தாறு தரம் வந்து போட்டார்.

அதைவிட தங்கச்சி மாரின்ர அட்டகாசம் சகிக்க முடியாதளவு ஒவ்வொருத்தின்ரை பிறந்த நாளுக்கும் மேளதாளத்தோட, மூன்று மணித்தி யால வீடியோ எடுத்து, விதவிதமாய் உடுப்பு, பலகாரம் செய்து, தங்கள மாதிரி ஓல் எவ் எடுத்ததுகளை கூப்பிட்டுப் பெரிய பார்ட்டி. ஏன் இவ்வளவு என்றால் அண்ணை பார்க்க அனுப்பினமாம். அண்ணைக்கு நித்திரை கொள் ளவே நேரமில்லை. நிம்மதியாய் இருந்து சுவா சிக்கவே நேரமில்லை சொன்னாலும் அதுகளின்ர மண்டைக்கு ஏறப்போவதில்லை.

ஏன் இவ்வளவு ஆடம்பரம் என்று கேட்டால் போதும் ஒரே அழுகை, நாங்கள் யாழ்ப்பாணத் தில இருந்து என்னத்தைக் கண்டம் என்று, மதன் அதற்கு மேல் ஒன்றுமே பேச மாட்டான். கண் காணாத அந்நிய தேசத்தில எலும்பையும் உருக் கும் பனியில் இவனது ஒவ்வொரு துளி வியர் வைக்கும் கிடைக்கும் காசில், தன்னை வருத்தி, உருக்கி உழைத்து அனுப்பும் பணத்தில் பவிசு காட்டுகிறார்கள். அம்மாகூட மறந்திட்டா. இவள வையைப் பற்றிச் சொல்லவும் வேணுமே?

இவனுக்கு ஒரே ஆறுதலாயிருந்தது வசந்தி யின் கடிதங்கள் தான். தனிமையில் தவித்துக் கிடக்கும் அவனை உயிர்ப்பிக்க, தென்றல் போல்

வருடும் வசந்தியின் கடிதங்களால்தான் முடியும். இவனது குடும்பத்தவரின் அட்டகாசங்கள் பற்றி ஒன்றுமே எழுத மாட்டாள். தன்னைப் பற்றி, தன்னுடைய கம்பஸ் வாழ்க்கை பற்றி, தானும் அவனும் வாழப் போகும் வாழ்க்கை பற்றி தான் இருக்கும். இவன் எத்தனையோ முறை அவளுக்குப் பிடித்தமான வற்றை வாங்க அனுப்பிய செக் அவனுக்கே திரும்ப வந்தது. வசந்தியும் அவனுக் காக அவனை எதிர்பார்த்து பதினொரு வருடங் களாகக் காத்திருக்கிறாள்.

மதனுக்கு அப்பாவின் மேலுள்ள பயத்தால் வெளிநாடு வந்த தன்மீதுதான் ஆத்திரம் வந்தது, கம்பஸ் போகாமல் ஏதாவதொரு வேலை பார்த் துக் கொண்டு அங்கேயே இருந்திருக்கலாம். சாதா ரணமாய் அங்க வேல செய்யிற ஒருவனுக்கு காசு இல்லாட்டியும் மனம் முழுக்க சந்தோஷம் இருக்கு வெளிநாட்டில எல்லாம் இருக்கு. நிம்மதியையும், சந்தோஷத்தையும் தவிர. புருஷனும், மனிசியும் கதைக்க ஏன் பார்க்கவே நேரமில்லை. பிள்ளை யளும், தாய் தகப்பனும் கதைக்க நேரமில்லை.

இவன் ஆற அமர யோசித்து நீண்ட கடிதம் எழுதினான் தான் அனுப்பிய காசுக்கு வட்டி எல்லாம் சேர்த்து மூன்று பேரின்ர கல்யாணத் தையும் முடிக்கலாம் நான் இனி உங்கே வரப் போறன் இது தான் சாரம்.

அவ்விடம் இருந்தும் நீண்ட மடல் ஒன்று வந்தது. அவன் அனுப்பிய பணத்தில் பத்தாயிரம்

தவிர ஒன்றுமே மிச்சமில்லை எனவும் கார், கலர் ரீவி, டெக், ஜெனரேற்றர் வாங்கியதில் எல்லாமே செலவழிந்து விட்டதாயும் எழுதப்பட்டிருந்தது. சாதாரணமாய் வேலையற்ற ஒருவனுக்கே யாழ்ப் பாணத்தில பதினைஞ்சு, இருவது லட்சம் வேண் டினம் உன்ர படிப்புக்கும், சிற்றிசனும் இருக் கிறதால உனக்கு வேண்டுற சீதனத்தைக் குடுத்து ஒருத்தின்ர அலுவல முடிக்கலாம். பிறகு உழைக் கிறதில மற்றவளவையைப் பார்க்கலாம். அத் துடன் சில பெண்களின் புகைப்படங்களும்

எல்லாவற்றையும் சுழற்றி எறிந்தவனுக்குக் ஹார்ட் அட்டாக் வரும் போல இருந்தது. குளிரி லும், பனியிலும் உழைத்து அவன் எத்தனை எத் தனை லட்சங்களை அனுப்பி இருப்பான். அவ் வளவும் சரி. அதுக்குள்ள மூத்தவள் தனக்கு அரசாங்கவேலை செய்யிற மாப்பிள்ளை தான் வேணுமாம். இவனுக்கு விசர் பிடிக்கும் போல இருந்தது அவையின்ர படிப்புத் திறத்தில அவை யளுக்கு டொக்டரும், என்ஜினியரும் தான் பார்க்க வேணும் என்று பொருமுவது தவிர வேறொன்றும் செய்ய இயலவில்லை.

அவசரமாகக் கடிதம் எழுதினான். தனக்கு இப்போது கலியாணம் வேண்டாம் என்றும் இருக்கிற காசை, நகையை வைத்துத் தங்கச்சி மாரின்ரை கலியாணத்தை முடிக்கும் படியும், தன் பெயரில் உள்ள காசையும் அனுப்புவதாகவும் எழுதினான்.

இரண்டு கிழமையின் பின் அப்பாவின் போன் "நீ என்னென்று இப்பிடி மாறினாயென்று யோசிச்சனாங்கள். கடைசி தான் சொன்னவள். உனக்கும் வசந்திக்கும் காதல் என்று உந்த எண்ணங்களை விட்டுடு அவை நாலைஞ்சு பெட்டையளை பெத்துப் போட்டுச் சீதனம் கொடுக்காமல் கலியாணம் முடிக்க நாலு திசையிலையும் பெட்டையளைக் கலைச்சு விட்டுக்கிடக்கு. அவளை விட வடிவான பெட்டையள் எத்தினை இருக்கு எனக்கு வந்த ஆத்திரத்தில அவையின்ர வீட்டிற்குப் போய் பெட்டையளைப் படிக்க அனுப்பிறிங்களோ, மாப்பிள்ளை பார்க்க அனுப்பிறியளோ என்று நல்லாப் பேசிப் போட்ட — —"இவன் போனை வைச்சு விட்டான்.

கடைசித் தங்கையைக் கொல்ல வேணும் போல ஆத்திரம் வந்தது. அண்ணா எனக்கு அண்ணியெண்டா வசந்தி அக்கா தான் வரவேணும் என்றவள் இப்ப... — எல்லாமே காசு செய்யிற வேலை.

இந்த மனுசன் குடிச்சுப் போட்டு அங்கபோய் என்னென்ன கத்திச்சோ தெரியாது. கடவுளே, வசந்திக்கும் மூன்று தங்கச்சிமார். கஷ்டப்பட்டாலும் கௌரவமான குடும்பம். வசந்தியின் கடிதம் வந்தால்தான் என்ன நடந்ததென்று தெரியும். வசந்தியின் மடலுக்காகக் காத்திருந்தவனுக்கு வந்தது பேரிடி.

வேலையால் வந்தவுடனே உடுப்பும் மாற்றாமல் கடிதத்துடன் கட்டிலில் அமர்ந்தான். கையில் கிடந்த கடிதம் நடுங்கியது. " அன்புக்குரியவருக்கு"

என்று தொடங்கி இது தான் நான் உங்களுக்கு எழுதும் இறுதி மடல் எனத் தொடங்கியிருந்தாள் வசந்தி. நெஞ்சம் திக்கிட அவசரமாக எழுத்தில் கண்ணை ஓட விட்டான். உங்களது அப்பா அன்றைக்கு வந்து எக்கச்சக்கமாகச் சண்டை போட்டார். காது கொடுக்க முடியாத வார்த்தைப் பிரயோகங்கள் ஆனால் அதற்காக நானொன்றும் பயப்படவில்லை, அன்றுதான் எல்லோருக்குமே நான் உங்களை நேசிப்பது தெரியும். ஆனாலும் மதன் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நீங்கள் போய்ப் பதின்மூன்று வருடங்களாகி விட்டன. எனக்கு கீழும் மூன்று தங்கைகள். நானிருக்கும் போது அவர்களுக்கு திருமணம் என்பது கேள்விக் குறி. உங்களைவிட்டு இன்னொருவர் ...எப்படி சாத்......தியம் மதன்? நான் எத்தனையோ இரவு பகலை யோசித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றேன். இங்கு யுத்தத்தால் அனாதைகளான குழந்தைகள், முதியவர்கள், இளம்பெண்களுக்காய் விடுதி ஒன்று திறந்திருக்கிறார்கள். சம்பளமற்ற, முழுநேர சேவைக்காய் விண்ணப்பித்திருக்கிறார்கள். நான் நாளையிலிருந்து அதிலே முழுநேர சேவகியாக இணையப் போகிறேன். ஆயுள் பூராகவும், மக்கள் சேவையில் புனிதமாகப் போகிறேன். உங்கள் தங்கைகள் கல்யாணம் முடிந்ததும் நீங்களும் செய்யலாம் என்று நான் எழுதமாட்டேன். ஏனென்றால் என்னுடைய மதனைப் பற்றி எனக்குத் தெரியும். நான் உங்களுக்குத் தந்த வாக்கை மறக்கவில்லை. நான் சாகும் வரை உங்களுக்கு மட்டுமே சொந்தமானவள். நான் இந்த

அவசர முடிவுக்கு வரக் காரணம் என் தங்கை களின் வாழ்க்கைப் பிரச்சனை தந்த அழுத்தம் மட்டுமே தான். தங்கைகளின் நல்வாழ்வுக்கு என்னுடைய வாழ்வையே நான் தியாகம் செய்திட்டேன். இருவரின் நிலையும் அதுதானே, மதன். அடுத்த ஜென்மம் ஒன்று இருக்குமானால் நிச்சய மாய் நாம் ஒன்று சேர்வோம். உங்களுடைய வசந்தி.

கடிதம் முடிக்கப்பட்டிருந்தது கறுப்பு மை யால் மணிபோல எழுதப்பட்டிருந்த எழுத்துக்கள் எழுத எழுத அழுததால் சில இடங்கள் அழிந் திருந்தன. எழுத்துக்களை மெல்லத் தடவியவனின் கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்து கடிதத்தில் சங்கமமானது.

அழுதுதான் என்ன பிரயோசனம்? அவனது சொர்க்கமே கை நழுவி விட்டதே, இனி வாழ்ந் தென்ன, விட்டென்ன? அவனுடன் சின்னனி லிருந்தே ஒன்றாய்ப் படிச்சு, எந்த நேரமும் சிரிப்பை இறைக்கும் வசந்தி ...... இனி ...... கடவுளே, கடிதம் பொய்யாயிருக்கக்கூடாதா? சாத் தியமாகாதவற்றையெல்லாம் இழுத்துப் பிடித்து யோசித்தது அவனது தவிக்கும் நெஞ்சம். ஆண்கள் அழக்கூடாது என்று யார் சொன்னது? உயிரும், உணர்வுமுள்ள ஒரு ஜீவனின் சோகத்தில் கூட ஆண், பெண் என்ற வேறுபாடா?

அண்ணனும் உணர்வுகளுள்ள ஒரு சராசரி மனிதன் தானே என்று யோசிக்காத தங்கை மீது, தாய் மீது, பதின்மூன்று வருடகாலம் இந்த நன்றி

கெட்ட குடும்பத்திற்காக உழைப்பையும், சக்தியை யும் வீணாக்கிய தன்மீதே அவனுக்கு ஆத்திரம் வந்தது. காலம் கடந்த ஞானோதயம். அவன் வாழ்வின் சூரியனே அஸ்தமித்த பிறகு அவனுக்கு ஒரு விடிவு தேவையா?

அதன்பிறகு அவன் வீட்டிற்குக் கடிதமே போடுவதில்லை யாழ்ப்பாணத்தில ஐந்து பேர் சாப்பிட எவ்வளவு காசு தேவையோ அதை மட்டும் அனுப்பினான். மேலதிகமாய் ஒன்றும் அனுப்புவ தில்லை. அங்கிருந்து வரும் ரெலிபோனிற்குக் கூட பதில் சொல்வதில்லை. இனிமேல் அவனது வாழ்வு இப்படித்தான் தொடரப் போகிறது. ஏதோ பெற்ற கடனுக்குக் காசு அனுப்புவதும், ஏனோ தானோ என்ற வாழ்வுமாக, பதின்மூன்று வருட மாக அவனையே நினைத்து உருகியவளின் இழப்பு அவனை நிரம்பவே பாதித்திருந்தது.

ரெலிபோன் மணி அடிக்கும் சத்தம் மதனை நிகழ் உலகுக்கு அழைத்தது. திருப்பியும் எடுத்துப் பார்க்கினம் போல கிடக்கு. தொடர்ந்து அடித்தது. அதை ஒருவித திருப்தியுடன் பார்த்துக் கொண்டி ருந்தான் மதன். அது அடித்து, அடித்து களைத்து ஓய்ந்தது. காய்ச்சலால் வரண்டுபோன உதடுகளை நாவால் ஈரமாக்கிக்கொண்டு படுக்கையால் எழுந் தான். தேவாவும், நாதனும் கரிசனையுடன் வைத்துவிட்டுப் போன கஞ்சியைக் குடித்துவிட்டு, கதிரையில் அமர்ந்து கொண்டான்.

கதவில் பதித்த கண்ணாடி வழியே வெளியே இலைகளை எல்லாம் உதிர்த்து விட்டு எதற்காகவோ தபஸ் இயற்றுவது போன்று வெறுமையாக நின்றது பைன் மரம். திட்டுத் திட்டான பனிப்படிவுகள். நீ கூடவா தொலைந்து போன உன் வசந்த கால வாழ்விற்காய் ஏங்கிக் கொண்டிருக்கிறாய்? மரத்துடன் மௌனமொழி பேசினான்.

தேவாவும், நாதனும் கூடத் தங்கள் தங்கைகளின் திருமணத்திற்கு உழைக்கத்தான் வந்திருக்கின்றார்கள், தாம் நேசித்தவர்களையெல்லாம் விட்டுவிட்டு. அவர்களையும் எச்சரிக்க வேண்டும். உழைப்பு, உழைப்பு என்று மூழ்கி உங்கள் சுய முகவரிகளைத் தொலைத்து விடாமல் பத்திரப் படுத்துங்கள் என்று.

அத்துடன், இதெல்லாம் பட்டறிந்த என்னுடைய அனுபவம் என்பதையும் சேர்த்தே சொல்ல வேண்டுமென நினைத்தபோது உதிர்ந்த மதனின் வரண்ட சிரிப்பை அள்ளிக் கொண்டு விரைந்த காற்றினிலே ஒற்றையாய் நிற்கும் பைன் மரத்திலிருந்தவாறு, துணையைத் தேடித் தேடிக் கூவும் வெளிர் மஞ்சள் நிறமான அந்தப் பெயர் தெரியாப் பறவையின் சோக கீதம் உயிர்ப்பாய்க் கலந்தது.

முற்றும்.

[3]

# மணமகன் தேவை

வேலைகள் யாவும் முடித்து, மிகுந்த களைப் போடு நாற்காலியில் விழுந்தேன். இன்றைக்கு எங்கட கல்யாண நாள். அவர் லீவு எடுக்க ஏலாத நிலை. நான் மட்டும் லீவு போட்டிட்டு, சின்னதாய் ஓர் விருந்துக்குத் தயார் பண்ணியதில் களைத்து விட்டேன். இந்த இருபது வருடகாலமும் வாழ்ந்த மனதிற்கினிய வாழ்க்கையின் நிறைவு என் நெஞ்சில் பரவி இதம் சேர்க்க, பக்கத்திலே கிடந்த பத்திரிகையைப் பிரித்தேன்.

ஆறுதலாக எல்லாவற்றையும் படித்துக் கொண்டிருந்தவளின் கண்களில் ' மணமகன் தேவை ' விளம்பரம் எதேச்சையாகக் கண்ணிற் பட்டது எனக்கு நன்கு பழக்கமான முகவரி. நாற்பத்துரண்டு வயதுள்ள, சிவந்த நிறமுள்ள, அழகிய பெண்ணுக்கு அரசாங்க வேலையிலுள்ள

மணமகன் தேவை. இதுதான் சாராம்சம் எனக்கு யாரென்பது ஞாபகம் வரவில்லை. யாராக இருக்கும்? மூளையைக் கசக்கிக் கொண்டேன். அட, அனிதா. சட்டென்று ஓர் மின்னல். அவளேதான். அனிதாவின் நினைவு என் இனிமையான ரீன் ஏஜ் காலத்துக்கு இழுத்துச் சென்றது.

நான் படித்தது ஆண், பெண் இரு பாலாரும் கல்வியயிலும் ஓர் பிரபலமான கல்லூரியில். என் பத்தாவது வயதில் அக் கல்லூரியில் அடியெடுத்து வைத்தபோது அனிதாவும் என்னோடுதான் சேர்ந்தாள். அப்போது உலகமே அறியாத சின்னப் பிள்ளைகள். விளையாட்டு, படிப்பு தவிர எதுவுமே புரியாத, புரிந்து கொள்ளத் தேவையற்ற இனிய பருவம். கால மலர்கள் உதிர உதிர எங்கள் மனதிலும், உடலிலும் புதுப்புது மாற்றங்கள். சிந்தனை. செயற்பாடு எல்லாவற்றிலுமே நிரம்ப மாறுதல். இந்த முரண்பாடுகள் அனிதாவிடமிருந்து என்னை விலகலுற வைத்தது.

எனக்குக் கீழே நான்கு தங்கைகள். பொறுப்பு அதிகம். முதிர்ச்சியும் அதிகம். நான் எல்லோரிடமும் கலகலப்பாகப் பேசுவேன். சரளமாகக் கதைப்பேன். அன்புக்காக, நட்புக்காக எதையும் விட்டுக்கொடுப்பேன். எனவே எனக்கு நண்பர்கள் அதிகம் ஆனால் எங்களின் ஏழ்மையை இயலாமையை குத்திக் காட்டுபவர்களை நான் சும்மா விடுவதில்லை. தக்க தருணத்தில், தக்க பதிலடி கொடுத்து விடுவேன். அனிதாவுக்கு, — அனிதாவுக்கு

மட்டும் எத்தனையோ தரம் பதிலடி கொடுத்திருக்கின்றேன்.

வகுப்பிலே எல்லோரும் தும்புத்தடி எடுத்துக் கூட்டுவோம். அது பொது நியதி. அது டொக்டரின் மகளாயிருக்கலாம், ஓர் ஆசிரியரின் மகனாயிருக்கலாம். ஆனால் அனிதா இதற்கு விதிவிலக்கு. நாங்கள் வேர்க்க, விறுவிறுக்கக் கூட்டும்போது, அனிதா இடுப்பிலே இரு கைகளையும் ஊன்றி எங்களை மேற்பார்வை செய்துகொண்டிருப்பாள். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். முடியவில்லை. மற்றவர்களுக்குக் கதைக்கப் பயம். தன்மையாகச் சொன்னேன். ''என்ரை வேலை எனக்குத் தெரியும், உம்மன்ரை வேலையை நீர் பாரும்'' என்றாள் திமிராக. எனக்கு ஏறிக்கொண்டு வந்தது. ''எது என்ரை வேலை? வகுப்புக் கூட்டவே என்னை வீட்டில மினக்கெட்டு அனுப்பிக்கிடக்கு'' என்றவள் பணிஷ்மென்ட்டாக ஒரு கிழமை தனியாகவே வகுப்பைக் கூட்ட ரீச்சர் விடுமட்டும் ஓயவில்லை.

நாங்கள் மெல்ல மெல்ல வளர்ந்தோம் அனிதா சிவப்பு. ஓரளவு அழகு. இயற்கையாக, சாதாரணமாக இருந்தால் அழகுதான். ஆனால் பள்ளிக்கூடம் வரும்போதே ஒரு அங்குலம் அளவு கண்டகண்ட பௌடர்கள், விதவிதமாய் கிறீம் எல்லாம் அப்பிக்கொண்டு வருவாள். யார் என்ன சொன்னாலும் கேட்கமாட்டாள். ஆள் வளர வளர திமிர், தான்தோன்றித்தனமான போக்கு, ஆங்காரம் எல்லாமே சேர்ந்து வளர்ந்தன. அந்தக்

கூரிய ஈட்டிகள் யாரை வேணுமானாலும் குத்திக் கிழிக்கத் தயாராயிருந்தன.

அவளோடு அந்த ஈட்டிகள் மேலும் மேலும், கூர்மையாக வளரக் காரணமாயமைந்தது அவளது வீட்டு வளர்ப்பு முறை. பணம் உள்ளவர்களை மட்டுமே மதித்து, அவர்களோடு மட்டுமே உறவாடும் அவர்களது செய்கை அனிதாவின் மனத்திலே பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. அதனால் அவள் அழகும், பணமும் உள்ளவர்களை மட்டுமே தான் மனிதராய் மதித்தாள். ஏனையோர் தான் சொல்வதைக் கேட்க வேண்டும். ஒற்றைப் பிள்ளையாக அவள் இருந்தது இதற்கு வாய்ப்பாயும் அமைந்தது.

வகுப்பிலேயும் தனது சட்டதிட்டங்களை நடைமுறைப் படுத்த முயல்வாள். எங்கள் வகுப்பில் கூட அவளுக்கு கூஜா தூக்குபவர்களும் இருந்தார்கள். ஆனால் அவள் உலக அழகியாய் இருந்தாலும், ஏன் விக்டோரியா மகாராணியாய் இருந்தால் கூட அவள் பேச்சைக் கேட்க நான் தயாரில்லை. எனவே அவளது சட்டதிட்டங்கள் எனது அதிரடியால் பிசுபிசுத்துப் போகும். இப்படிப் பூனையும், நாயுமாகவே நாங்கள் ஏ. எல் வரை வந்துவிட்டோம்.

தலையிடி தொலைந்தது என்று பார்த்தால் நான் எடுத்த அதே பிரிவு. சிவனே என்று படிப்பைத் தொடர்ந்தேன். றோட்டால் போகும்போது

அவன் பார்த்தான், இவன் சிரித்தான், அது சொன்னான் .... எல்லாவற்றுக்கும் தலை ஆட்டி வைப்போம் அதிலும் மிகப்பெரிய பகிடி என்னவெனில் ஏதோ ஓர் கதையில் நடிகைகளை விமர்சித்த போது "இந்தியாவில் இருந்திருந்தால் இப்ப நான் நடிச்சுக் கொண்டிருப்பன்" என்று சொல்ல "இப்பவும் என்ன? போய் நடிக்கலாம் தானே அனி?" என்று அப்பாவியாய் விழிகளை உருட்டி வைத்தேன் நான், பொங்கிவரும் சிரிப்பை அடக்கியபடி. அவளுக்கு மனநோயாக இருக்குமோ என்று கூட நான் சிலவேளைகளில் சிந்திப்பதுண்டு.

யாரோ ஒரு பெடியன் இவளுக்குக் கடிதம் கொடுக்கப்போய், அதை அவள் அம்பலப்படுத்தி அந்தக் கதை பேப்பராகவே வந்தது. விடயமறிந்து அவளது அப்பா, உறவினர்கள் .. தொடர்ந்து கொடுத்த அழுத்தம் காரணமாக இரண்டு தரம் தற்கொலைக்கு முயன்ற அவன் மனநோயாளி ஆகிவிட்டான்.

இப்படி இரண்டு மூன்று சம்பவங்கள் நிகழ்ந்தன. இப்படி அவளது ஏதோ ஒரு கதையை என் பக்கமாகத் திருப்பிவிட அவளது தகப்பன் படாதபாடு பட்டார். எனக்குக் கீழே நான்கு தங்கைகள் இருப்பது தெரிந்தும், நாங்கள் தன்மானத்தையும், கல்வியையும் மட்டுமே மூலதனமாக வைத்திருப்பது தெரிந்தும் அவர் தன் மகளைக் காப்பாற்ற, தன் கௌரவத்தை பாதுகாக்க எடுத்த முயற்சி

பிசுபிசுத்துப் போனது. தொடங்குவது மனிதன்; முடிப்பது இறைவனல்லவா?

எனக்கு கதை தெரிய வந்தது. சமூகத்தில் பெரிய மனிதனாய் அந்தஸ்து பெற்ற அவரது முகமூடியைக் கிழிக்க வேணுமென்ற வெறி வந்தது. ஆனால் என் தாயும் தந்தையும் போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும், கண்ண னுக்கு சமர்ப்பித்து விடு என்றனர்.

நான் படித்தேன். கம்பஸ் போனேன். என்னு டைய பஜ்மேட்டான, என்மேல் அன்பைச் சொரி யும் கணவன். மணியாய்இரண்டு குழந்தைகள். என் தங்கைகள் எல்லோருக்குமே நிறைவான வாழ்க்கை. ஆனால், அனிதாவுக்கு? அவள் அழகைத் தேடி னாள். பணத்தைத் தேடினாள். இரண்டுமே சேர்ந்து அவளுக்கு கிடைக்கவில்லை. அப்படியே கிடைத்தோரையும் பிடிக்கவில்லை. பிறகு ஏதாவது ஒன்று கிடைத்தால் போதுமென்று தேடினாள். கிடைக்கவில்லை. மணமானால் போதுமென இப் போது நினைக்கிறாள். ஆனால், அவளைத் தேடு வார் ஒருவருமில்லை.

ஸ்கூட்டர் சத்தம் கேட்கிறது. பேப்பரைப் போட்டுவிட்டு வாசலுக்கு ஓடுகிறேன், அவருக்காக.

யாவும் கற்பனை

முற்றும்

# [4]

## கணிப்பீடுகள்

எந்த வேலையையும் நிதானமாகச் செய்ய ரமணியால் முடியவில்லை. எல்லாவற்றிலும் பதற்றம். ராகவன் ஏன் இப்படி மாறிப்போனான்? என்ற கேள்வியின் விடையைத் தேடித்தேடி இன்றைக்கும் மண்டை வெகுவாய்க் களைத்துப் போயிற்று. ராகவன் யாருமல்ல. ரமணி, சுகந்தனின் ஒரேயொரு செல்வப் புதல்வன். ஏன் நான் இப்பிடியெல்லாம் மண்டையைப் போட்டுக் குழப்புறன் அதுதான், டொக்டர் சொல்லுவார் தானே என நினைத்தவளுக்கு நின்று நிதானிக்க நேரமில்லை. தலைக்கு மேலே கிடந்த வேலைகளைச் செய்து முடிக்கவே எட்டுமணியாயிற்று மகனைத் தயாராகச் சொல்ல அவனது அறைக்குள் போனாள்.

மூன்று மணிக்கே படிக்க எழுப்பிவிட்ட மகன் மும்முரமாகப் படம் கீறிக் கொண்டிருந்தான். தலையை ஒவ்வொரு கோணத்திலும் அசைத்து, அசைத்து வண்ணக்கலவையைத் தூரிகையால் சித்திரமாக்கிக் கொண்டிருந்தான். வந்த ஆத்திரத்தில் ஓங்கிக் குட்டு வைக்கக் கை உந்தியது. இன்றையோடு இதற்கொரு முடிவு வரும் தானே என மனத்தைத் தேற்றியவளாக "ராகவ், இன்றைக்கு ஒரு இடத்திற்குப் போகவேணும், படிச்சது காணும் வெளிக்கிடு" சொன்ன பிறகும் அசையாமல் அவனிருந்த நிலை அவளுடலை ஆத்திரத்தால் நடுங்க வைத்தது. அவசரமில்லாமல் திரும்பியவன் "இன்றைக்கு ஸ்கூல்ல சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் மீட்டிங் என்னாலே வரேலாது" என்று விட்டு சித்திரத்தில் ஷேட் பண்ணத் தொடங்கினான். அவனது பதில் அவளுக்கு ஆவேசத்தைத் தத்தது. "நீ என்னத்துக்கு உதுகளில சேரப்போனனி? நாங்கள் முதலே உதுகளில சேரக்கூடாதென்று சொன்னனாங்களெல்லே? படிப்பெல்லாம் மண்ணாகப் போகுது. இனி, திருவிழாக்களுக்கு கயிறுகட்டி சனத்தை ஒழுங்காக்கு. அது தான் இப்ப தேவை" என்றவள் வெடுக்கென அவ்விடம் விட்டகன்றாள். இந்தநேரம் பார்த்து சுகந்தனும் எங்கோ சென்றுவிட்டான். எனவே மகன் தன்ரபாட்டில வெளிக்கிட்டு ஸ்கூல் போவதை ஒன்றுமே செய்ய முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆனாலும் டொக்டர் தங்களுக்காய் ஒதுக்கிய நேரத்தைக் கருதி இருவருமாய்ச் சென்றார்கள்

பிரபலமான தனியார் மருத்துவமனை மனோதத் துவ நிபுணன் டொக்டர் பிரகாஷின் கிளினிக் வெளிநாடுகள் பலவற்றில் போய் படித்துத் தன் பெயரின் பின்னால் பலபட்டங்களைக் கொழுவிக் கொண்டிருப்பவன் இவர்களுக்காய், அதாவது ராக வனுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் காலை மணி பத்து சரியாக ஒன்பது ஐம்பத்தெட்டில் வாசலில் இறங்கி, ஒன்பது ஐம்பத்தொன்பதிற்கு டொக்டரின் அறைக் கதவினைத் தட்டி, இருக்கையில் அமர்கையில் சரியாக மணி பத்து.

டொக்டரின் கண்ணாடி ஊடான தீர்க்க மான பார்வை இவர்களை ஊடுருவியது. மௌனம் முதலில் சுகந்தனால் கலைந்தது. 'டொக்டர், நான் சுகந்தன். எலக்ரிக்கல் என்ஜினியராயிருக்கிறேன். இவ என்னோட வொய்ப் ரமணி. எங்கட ஒரே மகன்தான். ராகவன்' ராகவனை டொக்டரின் கண் கள் தேடின "அவன் வரேல்லை டொக்டர்" என்றாள் ரமணி, அவனின் தேடலைப் புரிந்தவ ளாக "பரவாயில்லை, நீங்கள் மேலே சொல் லுங்கள்" என்று கதிரையில் வசதியாகச் சாய்ந்து அமர்ந்து கொண்டான் டொக்டர் பிரகாஷ்.

'அவனுக்கு நாங்கள் ஒரு குறையுமே வைக் கேல்லை டொக்டர் இருந்தாலும் அவனின்ரை போக்குகள் எங்களுக்கிப்ப புரியேல்ல' என்ற ரமணி யின் கண்களில் நீர் திரையிட்டது. அவளால மேலே பேசமுடியவில்லை "ரமணி பி. எஸ். சி. கிராஜீ வேட் டொக்டர் ராகவன் பிறந்த உடனேயே அவ

வேலையை விட்டுட்டா'' — டொக்டரின் கண்களில் ஏன் என்ற வினா? ஐந்து வயதுக்குள்ள வளர்க்கிற வளர்ப்பு தானே ஆயுசு வரைக்கும்? சாப்பாடோ, மற்ற என்னவென்றாலும் சரியான கவனிப்பு இந்த வயதிலதானே, வேலைக்காரி என்றாலும் அவள் என்ன செய்தாளோ, கவனிக்கிறாளோ? நிம்மதியா ஒரு வேலையுஞ் செய்யேலாது. இவரின்ரை வீட்டிலயும் விடேலாது. இவரின்ர அண்ணாவுக்கு நிறையப் பிள்ளையள். அதுகள் சரியான குழப்படி, சண்டை, விளையாட்டு'' — என்றவள் ''அதோட இவரின்ர அண்ணியும் பெரிசாய்ப் படிக்கேல்லை. சின்னனிலேயே அவனின்ட மனத்தில அறிவுபூர்வமான விதைகள், — இதெல்லாம் நான் சொல்லத் தேவையில்லை'' என்று இழுத்தவளை ''ஓஹோ, மேலே சொல்லுங்கோ'' என்றான் பிரகாஷ்.

''எங்கட ராகவ் சரியான கெட்டிக்காரன் டொக்டர் ஐந்து வயதுக்குள்ள இங்லிஷ் ரைம்ஸ், தொடக்கம் இராமாயணம், மகாபாரதம் ......என்று எத்தனையோ எல்லாம் அவனுக்குத் தெரியும். இயர்வண் பிள்ளையே எழுதக் கஷ்டப்பட இவனுக்கு எல்லாமே அத்துப்படி.

வகுப்பில இவன் தான் முதல். ஸ்கொலர்ஷிப் எக்ஸாமில் கூட இவன்தான் மாவட்டத்திலேயே முதலாவது. ஓ. எல். இலும் நல்ல ரிஸல்ட்ஸ் எடுப்பான். ஏ. எல். மெரிட்டில் பாஸ் பண்ணுவான் என்று நாங்கள் நம்பிக் கொண்டிருக்க இவன் இவ்

வளவு நல்லாப் படிச்சுக் கொண்டு வந்தவன் படிப் பையே விட்டுட்டான் இன்னும் ஓ எல் எச்ஸா மிற்கு ஏழு மாதம் தான் கிடக்கு. ஆறு மாத மாய் அவனின்ர போக்கு வித்தியாசம், டொக்டர், படிக்கிறதேயில்லை. கடந்த இரண்டு டேர்மில் சில பாடங்களில் பாஸ்மார்க்ஸ் இற்கும் குறைவாய்த் தான் எடுத்திருக்கிறான் அதுவும் முக்கியமான பாடத்தில. அவன் ஒரு நாளுமே நைன்ரிக்குக் குறைய எடுக்கிறேல்லை'' ''நீங்கள் அவனுக்கு ரியூசன் ஒழுங்கு பண்ணேல்லையோ?'' ''எல்லாப் பாடத்திற்கும் பேர்சனல் கிளாஸ் டொக்டர்.''

''ஆனா ... நீங்கள் இரண்டு தரம் மார்க்ஸ் குறைஞ்சதுக்கு இவ்வளவு பதட்டப்படத் தேவை யில்லை'' என்று சொல்லும் போது மிஸ்டர் அன் மிஸிஸின் கண்கள் ஒருமுறை சந்தித்துக் கொண் டன. 'இல்லைடொக்டர், அதை விடமோசமாய்...' என்று சுகந்தன் தொடங்க ரமணி அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் கைக்குட்டையால் வாயை இறுக அழுத்திக்கொண்டாள். டொக்டரின் பார்வை சுகந்தனை ஏறிட்டது. ஏ. எல் படிக்கிற பொம்பிளைப் பிள்ளைக்கு ''அன்புக்குரியவளுக்கு'' என்று தொடங்கிக் கடிதம் எழுதியிருக்கிறான். நல்ல வேளை, எங்கட கையில கிடைச்சிட்டுது. பிறகு அவளின்ரை பிறந்த நாளுக்கு அனுப்ப வைத்திருந்த கார்ட்டையும் ரமணி கண்டுபிடிச் சிட்டா'' என்றான் கரகரத்த குரலில்.

"முந்தி என்ன சொன்னாலும் கேட்பான் டொக்டர். இப்ப சொல் வழி கேட்கிறதில்லை. முறைப்புப் பார்வைகள்; தான்தோன்றித்தன மான போக்கு. இவர் எத்தினை முறை பெல்ற் றால விளாசியிருப்பார். ஒன்றுக்கும் மசிகிறா னில்லை. இன்றைக்குக் கூட நான் படிக்கவென்று எழுப்பிவிட அவன் படம் கீறிக் கொண்டிருக்கி றான்."

"உங்கட வீட்டில வேற யார் யார் இருக்கினம்?" "என்ர அம்மா, அப்பா எல்லாம் இருந்தவை. இவன் இயர் நைனிற்கு வந்தவுடனே அவையளை அண்ணாவோட விட்டிட்டன். இவன் படிக்கிற துக்கு அவை கதைக்கிறது இடைஞ்சல் தானே?"

"ஓ...... ஸ்கூலுக்கு என்ன மாதிரிப் போய் வாறவன்?" "இவர் தான் கூட்டிக்கொண்டு போய் விட்டுக், கூட்டிக் கொண்டு வாறவர். அதுக்குக்கூட இப்ப ஒரே சண்டைதான். தன்னுடைய பிரண்ட்ஸ் எல்லாம் பகிடி பண்றாங்களாம். இன்னும் பபா மாதிரி என்று, என்ற படியா தனக்கு சைக்கிள் வேணுமெண்டு ஒரே ஆக்கினை."

"ஏன் அவன் வளர்ந்த பெடியன் தானே? நீங் கள் அவனுக்கொரு சைக்கிள் வேண்டிக் கொடுக்க லாந்தானே?" என்றான் பிரகாஷ் வினவும் குரலில். "குடுக்கலாம் டொக்டர், ஆனா ராகவன் வாற, போற வழியில பெடியளோட சேர்ந்து சேட்

டையள் பழகிடுவானோ என்றுதான், எங்களோட போய் வாறதென்றால் பயமில்லைத்தானே?' என்று நியாயத்தைப் பக்குவமாக முன்வைத்தாள் ரமணி.

"சரி, அவன் பிரண்ஸோட செலவு பண்ண பொக்கட் மணி கொடுக்கிறனிங்களோ?" டொக்டரின் கேள்வி. "இல்லை டொக்டர், அவன் சின்னப் பெடியன். நல்லது, கெட்டது அவனுக்குத் தெரியுமே? ரமணி ஒவ்வொரு நாளும் விதவிதமாய் சோர்ட் ஈட்ஸ் செய்து குடுக்கிறவா. ஆனா மற்றப் பெடியளுக்கும் சேர்த்துத்தான் குடுத்து விடுகிறது. தனக்கு ஒன்றும் தந்துவிட வேண்டாம் என்று இப்ப அடம் பிடிக்கிறவன். பெட்டையள் மாதிரி சாப்பாடு கொண்டு வாறான் என்று அவங்கள் பகிடி பண்றாங்களாம்" இது சுகந்தன்.

"ஓகே, மிஸ்டர். சுகந்தன், அவனின்ர பொழுது போக்குகள் என்ன மாதிரி? விளையாட்டுகள் என்ன மாதிரி?" "அவனுக்கு பொழுது போக்கிற்கே நேரமில்லை டொக்டர். ஒரே கிளாஸஸ். அவனுக்கு விளையாட்டில கொஞ்சம் ஈடுபாடு இருக்கு நாங்கள் ஸ்கூல் டீம் ஒன்றிலயும் சேர விடுறதில்ல. பிரக்டிஸ் என்று படிக்க விடாயினம். கிரிக்கட் மட்ச் பார்க்க விருப்பம். ரீ.வியை விட்டு நகரான். இரண்டு, மூன்று தரம் இப்பிடித்தான். இவர் ரீவியைக் கட்டி வைச்சிட்டார்."

"நல்ல அக்கறையாத்தான் வளர்க்கிறியள்" என்றான் நழுவிய கண்ணாடியைத் தூக்கியவாறே.

'என்ன பிரயோசனம் டொக்டர்? அவன் தான் இப்ப எல்லாத்திலேயும் தலைகீழாய் நடக்கிறானே? அவனை எப்பிடியும் பழைய ராகவனா மாத்த வேணும் டொக்டர். எங்களால ஏலாது. உங்களால ........ உங்களால தான் '' என்று கண்களில் நீர்ப்படலத்துடன் ரமணி சொல்லி முடித்த போது சுவரில் அலங்காரமாக மாட்டப்பட்டிருந்த கடிகாரப் பட்சி பதினொரு தரம் கூவியது.

'' எனி, எப்ப சேர் வரவேணும்?'' என்ற சுகந்தனின் கேள்விக்குப் பதிலாக '' வியாழக்கிழமை நாலரைக்கு வாங்கோ '' என்றான் டயறியைப் புரட்டியவனாய். '' வியாழக்கிழமை அவனுக்கு ஸ்கூல்ல ரெகுலராய் எக்ஸாம் இருக்கு. உங்களுக்கு வசதி என்றால் வேற எந்தநாள் என்றாலும் கூட்டிட்டு வருவோம் '' என்ற மிஸ்டர் அன் மிஸிஸ் சுகந்தனைப் பார்த்த டொக்டர் பிரகாஷின் வாயிலிருந்து அவசரமற்ற, நிதானத்துடன் வார்த்தைகள் உதிர்ந்தன.

'' ஐ,ம் சொறி. ட்றீட்மெண்ட் அவனுக்கில்லை, உங்கள் இரண்டு பேருக்கும் தான்.''

முற்றும்

[5]

# கானல் நீர்

உஷத்கால வானம் இருளை விடை அனுப்பி ஒளியால் வெளிறுவதைப் பார்த்தபடியே நவநீதன் சோம்பல் முறித்தான். இனிமையான நேரம். எத்தனையோ நாள் பார்த்தாலும் அலுக்காத அழகு. ஆனாலும் முன்னரைப்போல் ஒன்றிப்போய் இதம் அநுபவிக்கத்தான் அவனால் முடியவில்லை. பக்கத்திலே பவித்திராவைக் காணவில்லை. இவ்வளவு வெள்ளனவே ஏன் எழும்பி விட்டாள்? என்ற சிந்தனை ஓட "பவி...... பவி, பவித்திரா" என்று அழைத்த படியே ஹோலினுள் பிரவேசித்தவன், பவியைக்கண்டு விட்டான்.

மேசையில் முகத்தைப் புதைத்து, உடல் குலுங்க, அழுதுகொண்டிருந்தாள் பவித்திரா. பொலிஷ் பண்ணப்பட்ட மேசையில் அவளது கண்களால் வழிந்த கண்ணீர்த்துளிகள் தாம் நினைத்த

படி புள்ளிகளைத் தொடுத்திருந்தன. யன்னலி னூடாகக் கசிந்த வெளிச்சம் அவளுடலில் பட்டு மேலும் அவளை வெண்மையாக்கிக்கொண்டிருந் தது. அவளோ இதயமே பிளந்துபோன துயரத் துடன் கேவிக்கொண்டிருந்தாள். வேகமாக அவள ருகில் வந்தவன் '' பவி, என்ன இது சின்னப்பிள் ளையள் மாதிரி? ஏன் இப்பிடி அழுகிறீர்? என் னென்று சொல்லுமென் '' என்று அவளை நிமிர்த் தினான்.

சிவந்திருந்த கண்களால் அவனை ஏறிட்டவ ளின் கேவல் மேலும் அதிகமாக அவளைத் தன் னோடு அணைத்துக் கொண்டவன், அவள் தோள் களிலே தட்டி சமாதானப் படுத்தியபடி '' யாரே னும், ஏதாவது சொன்னவையே, பவி?'' என மென்மையாகக் கேட்டான். கேட்டவுடன் கேவல் அதிகமாக அவனிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டவள் '' ஒண்டுமில்லை, என்னைக் கொஞ் சம் அழ விடுங்கோ '' என்று சொல்லிவிட்டு மீண் டும் மேசையில் முகம் புதைத்தவளைச் சமாதானப் படுத்த வகை தெரியாது திகைத்தவன் '' அழு தால்தான் அவளது மனப் பாரமும் குறையும் '' என்று தீர்மானித்து அவ்விடத்தை விட்டகன்று கதிரையில் அமர்ந்து கொண்டான். அழுகைக்கு யார் காரணம் என நினைத்தவனைக் கடந்த கால நினைவுகள் தழுவிக் கொண்டன.

ஏ. எல் படிக்கும்போது நவநீதனுக்கும், பவித் திராவுக்குமிடையிலிருந்த நட்பு நாட் செல்லச்

செல்ல காதல் என்ற ஆத்மார்த்தமான இறுக்க மான பிணைப்பாக மாறியிருந்தது. பவித்திரா மிகவும் உணர்ச்சிவசப்படும் ரகம் யாரிடமாவது சிரித்துப்பேசினாலும் அல்லது அதிகநேரம் அவன் கதைத்தாலும் அன்றைக்கு அவள் மூட் அவுட் ஆகி விடுவாள். நவநீதன் தான் அதோ கதியாகி விடு வான். அவளைச் சமாதானப்படுத்துவதற்குள் அவனுக்குப் போதும் போதுமென்றாகிவிடும். மோப்பக்குழையும் அனிச்சைக்குப் பொருத்தமான உதாரணம் இவள் என்று கூட அவன் நினைப்ப துண்டு.

ஏ. எல் எடுத்தாயிற்று. இருவருக்கும் என்ரஸ் கிடைத்துவிட்டது. ஆனால் பவித்திரா படிக்க விரும்பவில்லை. நவநீதன் கேட்டதற்கு "நான் படிச்சு வேலைக்குப் போனாலும் குழந்தை பிறந்த வுடன் நின்றிடுவன் தானே நவநீதன்? என்னைக் கரைச்சல் படுத்தாதீங்கோ'' என்றாள். 'இதென்ன பவி? எத்தினைபேர் வேலைக்குப் போய்ப் பிள் ளையும் வளக்கினம்? இவ்வளவு நாளும் படிச்சதை எல்லாம் வேஸ்ட் ஆக்கப்போறீரே '' என்றவ னுக்கு "உங்களுக்கு என்ன தெரியும் நவநீதன்? உங்கடை அம்மா வீட்டில் இருந்ததில உங்களுக்கு ஒரு குறையும் தெரியேல்லை. ஆனா நான்? என்ரை அம்மா வேலைக்குப்போக அந்தச் சின்ன வயசில நான் தவித்த தவிப்பு எனக்கு மட்டும் தான் தெரியும். எனக்கு எல்லாமே அம்மம்மா தான். அம்மா வேலையால வந்து வீட்டு வேலை யள் பார்க்கும்போதே நான் அம்மம்மாவுடன்

படுத்து விடுவேன். அம்மா இரவு என்னைத் தன்னோடு படுக்க வைப்பா. நடு இரவில எழும்பி நான் அம்மம்மாவைத்தேடி வீரிட்டபடியேஓடுவேன். அன்றிலிருந்து இன்றைக்கு வரை அம்மாவுக்கும், எனக்குமிடையே இடைவெளி கூடினதே தவிரக் குறையவேயில்லை. அது மாதிரி என்ரை பிள்ளை இருக்கக்கூடாது, நவநீதன் எனத் தீர்க்கமாகக் கூறியவளை " நீர் வேலைக்குப் போகவேண்டாம் பவி, ஆனால் படியும். படிக்கிறது எதுக்கும் நல்லது தானே " என்று வற்புறுத்தித்தான் சம்மதிக்க வைத்தான்.

பட்டம் வாங்கிய மறுமாதமே திருமணம். மணமான இரண்டாம் மாதமே தான் கற்ற கல்லூரியிலேயே நவநீதனுக்கு வேலை கிடைத்துவிட்டது. சீதனம் இல்லாமல் தான் மணம் செய்வேன் என்று மகன் அடம்பிடித்து மணந்ததில் மனஸ்தாபம் உற்றபோதிலும், அவள் வந்ததும் வேலை கிடைத்ததில் நவநீதனின் வீட்டவருக்குச் சந்தோஷம் தான்.

பவித்திரா ஒற்றையாகப் பிறந்தவள் சின்ன வயதிலேயே விளையாட, கதைக்க ஒருவரும் இல்லாமல் நான்கு சுவருக்குள் வளர்ந்தவளுக்கு இனியாவது வீடு கலகலப்பாக இருக்க வேண்டுமென்ற ஆசை இருப்பதில் வியப்பில்லைத்தானே? கல்லூரிக்கு அருகில் வசதியான வீடொன்றில் தான் குடியிருப்பு வீட்டுச் சுவர் முழுவதிலும் மொழு, மொழு என்று உருண்டுதிரண்டிருக்கும் குழந்தைகளின் படங்

களை மாட்டி வைத்துவிட்டு "எங்களுக்கு நிறை யப் பிள்ளையள் பிறக்கவேணும் நவநீதன் குஞ்சு குஞ்சுகளாய் அவை செய்யும் குறும்புகளை நாங் கள் ஓடிஓடிக் கவனிக்க வேணும். நீங்களும் இவ் வளவு ஹாயாக இருந்து பேப்பரோ, புத்தகமோ படிக்கேலாது" என்று ஆவலாகப் பேசியவளை இவன் சிரிப்புடன் பார்த்த வண்ணம் இருப்பான்.

இடையிலே அவர்களுக்கிடையில் சின்னச்சின் னச் சண்டைகள் வரும். நவநீதன் தான் வேணு மென்றே ஆரம்பிப்பான் அதுவும் அநேகமாய்க் குழந்தை பற்றித்தான். என்ன குழந்தை முதலில் பிறக்கும் என்றோ, என்ன பெயர் வைப்பதென்றோ, என்ன படிக்க வைப்பதென்பதில் தான் சச்சரவு. நவநீதன் வேணுமென்று அவள் சொல்வதற்கு எதிராகச் சொல்லப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டுத் தாங்கமுடியாமல் கண்ணீர் திரை யிட எழுந்து விடுவாள். முடிவில் நவநீதன் தான் சரண்டர் பண்ணுவான் ஒரு வருடம் விருந்துகளி லேயே கழிந்து விட இரண்டாவது வருடம் பிறக் கையிலே தான் முதன்முதலாகப் பவித்திரா பயப் படத் தொடங்கினாள். நவநீதனிடம் சொன்ன போது அவன் அதை அலட்சியப்படுத்தினாலும், பவித்திராவின் நச்சரிப்பைத் தாங்க இயலாது ஹொஸ்பிற்றலுக்குப் போனார்கள்.

வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண் டிக்கொண்டு, நெஞ்சம் படபடக்க, நடுங்கியபடி இருந்தாள் பவித்திரா. நவநீதன் எவ்வளவு சொன்

னாலும் அவள் தன் நிலையை மாற்றுவதாயில்லை. டொக்டர் இரண்டு பேரிலேயும் ஒரு பிரச்சனையு மில்லை என்று சொன்ன போதுதான் அவளுக்குப் போன உயிர் திரும்பி வந்தது. அந்த சந்தோஷத் தில கண்ணீரே வந்துவிட்டது. டொக்டர் அவளது நிலையைப் புரிந்து கொண்டார்.

' மிஸிஸ் நவநீதன் நீங்கள் பயப்படத் தேவை யில்லை. உங்கள் இரண்டுபேருக்கும் குழந்தை பிறப் பதிலே எந்தச் சிக்கலுமில்லை. அதோட, உங்க ளுக்கும் கொஞ்ச வயது தானே?' டொக்டர் சொன் னதை உள்வாங்கிக் கொண்டாள்.

ஆனால் இரண்டு வருஷமும் முடிய ஒருவேளை செக்பண்ணியதிலே ஏதும் பிழையோ என்ற பயம் மனதிலே வேரூன்ற நவநீதனைக் கரைச்சல் படுத்தி இன்னொரு டொக்டரிடம் சென்றார்கள். அவரும் அதே பதிலைச் சொல்ல நிம்மதியாய்த் திரும்பி னார்கள்.

அதன்பிறகு பவித்திரா ஒரு விரதம் மிச்சம் விடுவதில்லை. சகல விரதங்களையும் பிடித்ததில் ஏற்கனவே மெல்லிய உடல்வாகு கொண்ட அவள் இன்னும் மெலிந்து விட்டாள். ஒருநாள் எதற்கா கவோ கல்லூரி வேளையுடன் முடிய வீட்டிற்கு வந் தான் நவநீதன். குழந்தைகளின் படங்களில் தூசி துடைத்துக்கொண்டிருந்த பவித்திரா திரும்பினாள். அழுதழுது சிவந்த கண்களும், கன்னத்தில் கண் ணீர்க் கோடுமாய்த் திரும்பியவளைப் பார்த்ததும்,

இவ்வளவு நாளும் பொறுத்துப் பொறுத்துப்பார்த்த நவநீதனுக்கு அடக்க முடியாத ஆத்திரம் வந்தது. '' உமக்கென்ன விசரே பிடிச்சிட்டுது? பிள்ளை இல்லை என்றிட்டு விசர்க்கூத்து ஆடுறதே? பிள்ளை பிறக்கமுதல் சாப்பாடு இல்லாமல் நீர் முடியப் போறீர் '' வெயிலில் வந்த களைப்பும் சேர்ந்து அவனது ஆத்திரத்தைக் கூட்டிவிட்டது ''நீங்கள் மட்டும்தான் இவ்வளவு நாளும் சொல்லேல்லை. நான் முடிஞ்சால் உங்களுக்கு நல்லது தா...னே'' முடிக்கமுதல் அவளது கன்னம் அதிர்ந்தது.

அவள் அப்படிச் சொன்னதை அவனால் தாங்க முடியவில்லை. தான் அவளை முழுமையாக நேசிப்பதை உணர்ந்தும் அவள் தன்னை இப்படிச் சொல்லி விட்டாளே என்ற வேதனையில் தான் அவளை அடித்து விட்டான். அந்த வேதனை அவனது முகத்தில் தெரிந்தது. அவ்விடம் விட்டு அகன்று விட்டான். பவித்திராவுக்கும் அது தெரியும். ஆனால், அன்று நவநீதனின் வீட்டிற்குப் போயிருந்த போது நடந்ததைத் தான் அவளால் தாங்க முடியவில்லை.

அங்கே நவநீதனின் அக்கா, தங்கை எல்லோருமே இருந்தார்கள். அவளுக்குப் பிள்ளையும் இருக்கிறது. '' என்னவும் விஷேசமே அண்ணி '' என்று அவள் கேட்க '' அப்படி ஒன்றுமில்லை '' இவள் சொல்ல '' அவை படிச்சவையெல்லோ, எங்கள மாதிரிப் பிள்ளையளைப் பெத்துக்கொண்டிருக்கினமே? என்ன பவித்திரா? '' என்று அவனது

அக்கா கேட்க "சீச்சீ, அப்படி ஒன்றுமில்லை" என்று சொல்லி விட்டு வருவதற்குள் இவள் பட்ட பாடு ஆண்டவனுக்குத் தான் தெரியும். தான் குழந்தைக்காக எவ்வளவோ ஏங்கிக் கொண்டிருக்க இப்படியான குத்தல் கதைகள் அவளைத் தவிக்க வைத்தன. இந்தக் கோபங்களை அவள் அவனிடம் தானே காட்ட முடியும்? அவனை நன்றாக அறிந்த படியால் அவன் அடித்ததற்கு அவள் வருந்த வில்லை உடனேயே சமாதானமாகி விட்டாள்.

ஊர்க்கோயிலில் திருவிழா நடைபெற்ற பதி னைந்து நாட்களும் விரதமிருந்து அடியழித்ததில் மிகவும் பலவீனமாயிருந்தவள், வீடு வரும் வழியில் மயங்கிச் சரிந்து விட்டாள். மருத்துவமனையில் சேர்த்து, செலைன் ஏற்றி அவள் மீண்டும் தேறி வருமளவும் நவநீதனின் நிலை சொல்லி மாளாது.

பிள்ளைக்காக ஏங்கும் அவள் படும் வேதனை களையும், தன்னையே உருக்கிக் கொள்வதையும் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கத்தான் அவ னால் முடிந்தது. " பவி, ஆண்டவன் தரும் போது தரட்டும். அதற்கு நீர் சுகமாய் இருக்க வேண்டும்" என்று அவன் சொல்வதை மௌனமாகக் கேட்டுக் கொள்வாள்.

பவித்திரா மாறிப் போனாள். முன்னர் இருந்த பவித்திரா இப்போதில்லை. தன் கட மையைச் சரியாகச் செய்து கொண்டு யாவற்றி லும் ஒதுங்கி நின்றாள். வெளியில் கோயிலைத்

தவிர வேறொரிடமும் வெளிக்கிடுவதில்லை. மொத்தத்தில் உயிர்ப்பற்ற பவித்திரா. தான் விரும்பும் போது, எந்த நேரமும் கலகலத்தபடி, சிரிப்பை இறைக்கும் பவித்திராவைத் தற்போதைய பவித்திராவுக்குள் கொண்டு வர நவநீதன் சிரமப்பட்டான்.

அவனிடம் படிக்க வரும் பிள்ளைகள் கூடச் சொன்னார்கள் " ஏன் சேர் பவித்திரா அக்கா முந்தி மாதிரி ஒருவருடனும் கதைப்பதில்லை? " இதற்கு விடை சொல்ல அவனிடமும் விடை இல்லையே?

அவனுக்கு அவளது பெற்றோர் மீது தான் ஆத்திரம் வரும். அவளை ஒற்றையாகப் பெற்றாலும் அவளுக்குச் சரியான அரவணைப்பையும், அன்பையும் காட்டாமல் நடத்தியதில் தானே அவள் தன் குழந்தைக்கான பாசத்தை நெஞ்சு நிறையத் தேக்கி வைத்துக் கொண்டு ஏங்குகின்றாள்? அவனுக்கும் நான்கு வருடங்களாகப்பிள்ளை இல்லை என்ற தவிப்பு இருந்த போதும் அவளளவுக்கு இல்லை.

யாராவது பிள்ளை இல்லாததைப் பற்றிக் கேட்டால், கதைத்தால் கூட அவனிடம் சொல்ல மாட்டாள். அவள் அழுவதிலிருந்து அவன் புரிந்து கொள்ளுவான். நேற்று இங்கே அம்மா வந்திருந்தா அவதான் என்னவோ சொல்லிப் பவி அழுகிறா என நினைத்த அவனை " இந்தாங்கோ

ரீ '' என்ற குரல் நிகழ்காலத்துக்குக் கொண்டு வந்தது.

பவித்திரா நீட்டியதைப் பெற்றுக்கொண்டான். " ஏன் அழுதனீர்? இனியாவது சொல்லுமென், பவி '' என்று கேட்டான். " ஒண்டுமில்லை. நீங்கள் வேளையோட மார்க்கெட்டிற்குப் போய்ட்டு வாங்கோ '' என்றுவிட்டு அகன்றாள்.

இரண்டு வாரங்கள் நகர்ந்தன.

* * *

பவித்திரா காலையிலேயே கோயிலுக்குப் போய்விட்டாள். ஞாயிற்றுக்கிழமையை அநியாயமாக்காமல் என்ன செய்யலாம் என்று யோசிக்கவே பத்துமணி ஆகிவிட்டது. பவித்திரா ஓடி வந்தாள். " என்ன பவித்திரா '' என்று ஏறிட்டவன் அவளது முகத்தின் மலர்ச்சியைக் கவனித்துவிட்டு " என்ன, சொல்லும், சொல்லுமென் '' என " எங்களுக்கெல்லோ, எங்களுக்கெல்லோ ஒரு பேபி கிடைக்கப் போகிறது '' எனச் சொன்னவளை இறுக அணைத்துக்கொண்டான்.

" அப்பாடி, இப்பத்தான் என்னுடைய பழைய பவியைப் பார்க்கின்றேன் '' என்றவன் " நிச்சயமாய்த்தானே பவி '' என்றான். " ஓம், நவநீதன். டேட் சரியாய்ப் பிந்தும் போதே எனக்குச் சந்தேகம் தான். அதான் உங்களிடம் சொல்

லாமல் காலையிலேயே டொக்டரிடம் போய்ட்டு வாறன் என்றுவிட்டு மாமி வீட்டிலும், எங்கட வீட்டிலும் இன்றைக்கு இங்கதான் சாப்பாடு என்று சொல்லிவிட்டு வாங்கோ " என்றாள் அவசரமாக. " அது சரி பவி, முதலிலே பக்கத்திலே அன்றிக்குச் சொல்லுமென் " என " அவையெல்லாம் இன்டைக்கு கோயிலிலே ஏதோ நேர்த்தி என்றிட்டு வான் பிடிச்சுப் போய்ட்டினம். நீங்க போய்ச் சொல்லிட்டு, மரக்கறியும் வாங்கிக் கொண்டு வாங்கோ " என்றாள் நீண்ட பெரு மூச்சோடு " சரி, போய்ட்டு வாறன் " என்று சைக்கிளில் விரைந்தான் நவநீதன்.

இந்த நிமிசத்திலே எல்லோரும் வரப்போகினம். இவ்வளவு நாளும் விசரில இருந்ததில வீடு அலங்கோலமாய்க் கிடக்கு. என்று எண்ணமிட்டபடி கேர்ட்டின் சேலை, கதிரைகளின் உறை என்பவற்றை மாற்றியவள் கழற்றியவற்றையெல்லாம் தோய்ப்பதற்கு அள்ளிச் சென்றாள்.

இரு வீட்டிலும் சொல்லிய நவநீதன், மரக்கறிகளையும் வாங்கிக்கொண்டு ஏதோ ஒரு நினைவு வரப் பவித்திராவுக்கு ஒரு சீலையும் வாங்குவம் என எண்ணியவாறு புடைவைக் கடைப் பக்கமாக சைக்கிளைத் திருப்பினான்.

குவிந்திருந்த உடுப்புக் குவியல் எல்லாவற்றையும் மொத்தமாகத் தோய்த்துவிட்டு, எல்லாவற்றையும் வாளியில் பிழிந்து அடுக்கிய பவித்தி

ராவுக்கு கிணற்றைச் சுற்றிக்கொண்டு போகப் பஞ்சியாக இருந்தது. கெதியில் வேலை முடியட்டும் என நினைத்துக் கிணத்துக் கட்டுக்கு மேலே ஏறி அந்தப் பக்கமாயிருந்த கொடிக்குப் போகையில் காலையில் சாப்பிடாத சோர்வு, ஏற்கனவேயிருந்த பலவீனம், தாயாகப் போகையிலுள்ள அசதி இவையெல்லாம் சேர்ந்து தலைசுற்றப் பயத்தில் இடப்பக்கமாகச் சரிய முற்பட்டவளை வலக்கையி லிருந்த வாளியின் பாரம் இழுக்கத் தொபீரென்று கிணற்றுக்குள் விழுந்தாள்.

அவளை மையப்படுத்திப் பெரிய, பெரிய வட்ட அலைகள் விரிந்தன. முதல் தரம் அடிக்குப் போய் வந்து ''ஐயோ......நவ ...... நீ ...... ன் ...... பி ...... ள்'' என்று குழறியவள், அடுத்தமுறை '' பிள் ...... ளை '' உடன் நுரையீரல் முழுவதும் நீர் நிரம்ப அவளாயிருந்தவள், அதுவாகிவிட் டாள்.

எத்தனையோ கடை ஏறி இறங்கி அவளுக்கு பிடித்த கலரிலே ஒரு சாறி எடுத்துக்கொண்டு மனம் முழுக்க மகிழ்ச்சி நிரம்ப வந்துகொண்டி ருந்தான் நவநீதன். முதல் பிள்ளை பொம்பிளைப் பிள்ளையாகத்தான் பிறக்கவேணும். அதுதான் நல்லது. பூரணி என்றுதான் பேர்வைக்க வேணும். அப்பதான் எல்லாவற்றிலும் பூரணமாயிருப்பாள். ஆனாலும் பவி என்ன நினைத்திருக்கின்றாளோ தெரியேல்லை. அவ்வளவு ஏங்கினவள், பாவம்.

எல்லாவற்றையும் அவள் பொறுப்பிலேயே விட்டி டுவம் என இனிய கற்பனைகளோடு வந்து கொண்டிருந்தவனின் வாழ்வே கானல் நீராகி விட்ட செய்தியைச் சொல்லக் காற்று மட்டும் கண்ணீரோடு விரைந்தது.

— யாவும் கற்பனை —

## [6]

# வெந்து தணிந்த காடுகள்

ஏதோ சிந்தனையில் சாப்பாட்டை அளந்து கொண்டிருந்த புவனாவிற்கு சாப்பிடத் தோன்றவில்லை. கொட்டி விட்டுக் கழுவலாம் என்று எழுந்தாலோ கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது. தடுமாறி இருந்தவளுக்குத் தன் நிலையை நினைக்கக் கண்களிலிருந்து கண்ணீர் ஊற்றெடுத்தது. கண்ணீர்ப்படலம் கண்ணை மங்கலாக்க வேண்டா வெறுப்பாக உணவை வாயுள் தள்ளினாள். கண்ணிலிருந்து வழிந்த கண்ணீர் உணவோடு சேரும் பிரக்ஞையே இல்லாமல் புவனாவின் மனம் எங்கோ, எங்கோ சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

புவனாவின் அப்பா சுருட்டுத் தொழிலாளி. மூன்று அக்காமார். கடைக்குட்டி புவனா. எல்லோரிலும் புவனா படு சுட்டி. ஓ. எல் நல்ல

ரீஸல்ட்ஸ். தமிழ் மேலுள்ள காதலினால் ஏ. எல் இல் ஆர்ட்ஸ் பாடமாயிற்று. கதை, கவிதை எழுதுவதெல்லாம் அவளுக்குக் கைவந்த கலை. அவள் எழுதியது பிரசுரமாகாத பத்திரிகைகளே இல்லை எனலாம். அத்துடன், கூடவே மும்முர மான படிப்பும் கூட.

ஒரு நாள் தரகர் கந்தையாவின் திடீர்ப் பிர வேசம் புவனியின் அப்பாவுக்கு ஒன்றுமே விளங் கேல்லை. தன் மூத்த இரு பெண்களுக்கும் சிரமப் பட்டுக் கலியாணம் முடித்து விட்டு முழி பிதுங்கி நிற்கும் அவருக்குத் தரகரின் வருகைக்கான கார ணம் புரியவில்லை.

"என்ன ரத்தினம் முழுசிறாய்? நல்ல சம்பந்த மொண்டு வந்திருக்கு" என்று முடிக்குமுன்னே "அண்ணை, இன்னும் அவளவையின்ர கடன் தீரேல்லை. அதுக்குள்ளே, இன்னொரு கலியா ணமே? அதோட அவள் புவனி சின்னப்பெட்டை தானே? அவளுக்கென்ன அவசரம்" என்றார் அவசரமாக. "ரத்தினம், பொறு அவசரப் படாதே. அவையளுக்குச் சீதனம் வேண்டாமாம். உவளை எங்கேயோ கண்டவையாம். பிடிச்சுப் போச்சு. இவளுக்கும் சீதனம் கொடுத்துச் செய்ய வைச்சிருக்கிறியே? ஒட்டாண்டியாகாமல் வடிவாய் யோசித்துச் செய்" என்று ரத்தினத்தின் மன திலே சிறு கனலை உருவாக்கி விட்டுப் போனார் இரண்டு நாளாய் யோசித்து யோசித்துச் சிறு கனல் பெருந்தீயானது.

கடைசி நேரத்தில் தான் புவனிக்கு இதெல்லாம் தெரிய வந்தது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. "அப்பா, இதெல்லாம் என்னப்பா? பத்தொன்பது வயதிலே எனக்கு இதெல்லாம் தேவையே? என்றழுதவளை அம்மா தான் சமாதானப்படுத்தினா. பிள்ளை, உனக்கு வீட்டு நிலவரம் தெரியும் தானே? பிறகு நாங்கள் உன்னை வச்சுக் கொண்டு என்ன செய்யிறது? எனவும், "அம்மா, எனக்குக் கலியாணமே வேண்டாம் நான் படிச்சு நல்ல வேலை செய்யப் போறன்" என்று அவள் கூறியதை யாருமே காதில் வாங்கவில்லை. சீதனம் இல்லை என்பதும். அறிந்தவரையில் நல்ல குடும்பம் என்பதும் தான் அவர்களை இந்தக் கலியாணத்திற்கு அவசரப் படுத்தியது. ஆனால், புவனியின் கண்ணீருக்கு மௌனமான சாட்சிகளாயிருந்தவை இரவுகளும், தலையணைகளும் தான்.

ஒரு வாரத்தில் புவனா திருமதி. நாதன் ஆகிவிட்டாள். இருவருக்குமிடையே பதினான்கு வயது வித்தியாச[illegible] திருமணத்தின் போது இவளது நட்பான [illegible] எதிர்கொண்ட அவனது முகத்தில் அதற்[illegible]ரொலியே இல்லை. அவளுக்கு வியப்பாகத்தான் இருந்தது. சிரிப்புக்குக் கூடப் பஞ்சமான மனிதர்களும் இருக்கின்றார்களா என்று?

அன்றிரவு தான் அவனைப் பற்றி அவளுக்கு முதல்முதலாகத் தெரிய வந்தது. அவனது முதல்

கேள்வியே பின்னேரம் ரிஸப்ஷனில் உன்னட்ட வந்து கதைச்ச அந்தப் பெடியன் யார்? என்றது தான். அவனது கேள்வியின் அர்த்தம் புரியாவிட்டாலும், குறிப்பிட்டவனின் நினைப்பில் முகம் விகசிக்க "குமரன் அண்ணையைக் கேட்கிறியளே?" என்றாள். " உங்களுக்குச் சொந்தமே? " இது அவனது இரண்டாவது கேள்வி. " இல்லை. பழக்கம் " அதானே, பார்த்தன். அண்ணை மட்டுமோ அல்லது "? நெருப்பாய் விழுந்த கேள்வியில் பொசுங்கிப் போனாள் புவனி என்ற அந்தச் சின்னப்பெண். அண்ணா – தங்கை என்ற அந்தப் புனிதமான உறவினை இப்படிக் கூடக் கொச்சைப் படுத்த முடியுமா என்ற எண்ணமே அவளை இம்சைப் படுத்தியது. அதுவும் முதல் முறையாகப் பேசும் போதே? இந்த முறையற்ற ஆரம்பத்தின் முடிவு என்ன மாதிரியோ என்ற நினைவிலேயே மனம் சில்லிட்டது.

எந்திரமயமான வாழ்க்கை. ஒரு நேசமான வார்த்தை, பரிவான பார்வை எதுவுமே அவனுக்குத் தெரியாது. அவனது தேவைகள் பூர்த்தியானால் சரி. அவளும் ஒரு உயி[illegible] உணர்வும் உள்ள மனிஷி என்பதை உணரா[illegible]முரட்டு மனிதன். இவளது தாயும், தந்தையும் இவளைப் பார்க்க வருவது கூட அவனுக்குப் பிடிக்கவில்லை. அதை அவள் தன் தாயிடம் " இனிமேல் இங்கே வரவே வேண்டாம் அவருக்குப் பிடிக்கவில்லை " என்று மிகச் சாதாரணமாகச் சொன்ன போது தாய் அதிர்ந்து போனாள்.

இரவுகளிலே தனக்கு மேலே கால் போடாமல் நித்திரையே கொள்ளாத புவனி, தொட்டதற்கும் அம்மா, அம்மா என்று தன்னையே சுற்றி வந்த புவனி, இப்போது, வரவே வேண்டாம் என்று சொல்லும் புவனி... அவளுக்கு ஒன்றுமே புரிய வில்லை. 'உங்களனைவரதும் நன்மைக்காக என்னை புதைகுழிக்குள் தள்ளி விட்டாயே, அம்மா' எனச் சொல்லாமல் சொல்லும் அவளது உணர்வற்ற பார்வையை எதிர் கொள்ளத் திரா ணியற்று, சேலைத் தலைப்பை வாயில் வைத்து அழுகையை அடக்கியபடியே அகன்று விட்டாள். அன்றிலிருந்து ஒருவருமே வருவதில்லை.

புவனி தீவாகிப் போனாள். அவளுக்கு உறு துணையாயிருந்தவை பத்திரிகைகள் தான். தன் ஓய்வு நேரங்கள் எல்லாம் கதை, கவிதையாய் எழுதித் தள்ளினாள். தன்னுடைய இந்த அற்ப மான சந்தோஷத்தில் கூட மண் விழப்போவது தெரியாமல் மகிழ்வடைந்தாள். ஒரு சனிக்கிழமை நாதனும் வீட்டில் இருந்தான். சமையலறையில் ஏதோ வேலையாயிருந்தாள் புவனி திடீரென்று, '' இவர் எழுத்தை [illegible]சிக்கிறாராமோ இல்லை எழு தினவளை நேசிக்கிறாராமோ '' என்று இறுகிய குரலில் கேட்டபடி கடிதத்தை இவளை நோக்கி எறிந்தான். மௌனமாய்க் குனிந்து எடுத்தாள். ஒரு இரசிகனிடமிருந்து வந்த மடல். தான் அவ ளுடைய யதார்த்தமான எழுத்துக்களை நேசிப்ப தாயும், நாவல்கள் எழுதுவதிலும் இனி ஆர்வம் காட்டுங்கள். இது தான் அந்தக் கடிதத்தின்

சாரம். கடிதத்தை எழுதியது 'அவள்' ஆக இல்லாமல் 'அவன்' ஆக இருப்பதுதான் பிரச்சனை. ஒன்றுமே பேசாமல் எரியும் நெருப்பினுள் கடிதத்தை இட்டுத் தன் வேலையைத் தொடர்ந்தாள். அவனை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. ஆனால், அன்றிலிருந்து புவனியின் ஆக்கங்களைப் பத்திரிகைகளில் காணக்கிடைக்கவில்லை. ஆக, அவளுக்கிருந்த ஒரே ஒரு சந்தோஷமும் போய் விட்டது.

பண்டிகைகளின் போது அணிவதற்காகத் தனக்குரிய உடைகளைத் தேர்ந்தெடுப்பதில் கூட அவளுக்கு உரிமையில்லை. அவன் தான் அதையும் வாங்கி வருவான். அப்படி வகைகள் பாட்டிமாருக்குத் தான் பொருத்தம். அவளும் மௌனமாகவே ஏற்றுக் கொள்வாள். அதை விடப் பெரிய சோகம், அவள் அவனுடன் கோயிலுக்கு, வேறு இடங்களுக்குப் புறப்பட்டாலும் கூட வீட்டிலிருந்து புறப்பட்டது வரை, திரும்பி வந்து சேரும்வரை நரக வேதனை தான். கழியும் ஒவ்வொரு நிமிடமும் அக்கினி வளையத்துள் சிக்கிய உபாதைகள். யாராவது, தற்செயலாகப் பார்த்து விட்டால் போதும், அவன் பார்த்ததற்கு அவள்தான் காரணம் என்றும், ஆட்டம் காட்டுவதற்குத்தான் வெளிக்கிடுகிறது என்றும் எல்லோர் முன்னிலையிலும் பேசத் தொடங்கி விடுவான். மற்றவர்களின் பரிதாபப் பார்வைகளால் இவளுக்கு வாழ்க்கையே வெறுத்து விடும். கண்ணீரைச் சிரமப்பட்டு அடக்கியவாறே வீடு வந்து சேர்வதற்

குள் இவள் படும் பாடு சொல்லி மாளாது. இப்படி இரண்டு, மூன்று தரம் நடந்ததிலிருந்து வெளியே புறப்படுவதைத் தவிர்த்துக் கொண்டாள். வீடு தான் உலகமாயிற்று சுருக்கமாக, வீட்டுச்சிறை.

ஆனாலும் அவள் முற்றுமுழுதாக உணர்வுகளற்ற நிலையில் ஜடமாகவே மாறுவதற்குக் காரணமானது இன்னொரு நிகழ்வு. ஒரு நாள் பின்னேரம் அவன் எங்கேயோ போய் விட்டான். அவள் ஜன்னலுக்கருகே நின்றிருந்தாள். முன்னரிலிருந்தே அவள் முகில்களின் நகர்வுகளை மணிக்கணக்காக இரசிப்பதுண்டு. எங்கிருந்தோ வெல்லாம் வந்து சங்கமிப்பதும், ஒன்றாக இருந்தவை விலகி விலகிச் சென்று பொட்டுப் பொட்டாய்க் கலைந்து மறைவதும், வெவ்வேறு உருவங்களாவதுமாக இயற்கையின் கையில் க்ளேயைக் கொடுத்து விரும்பிய உருவங்களாக்கும் படியான இந்த விசித்திரமான விளையாட்டை அவள் ரசிப்பதுண்டு. அதே போல் அவள் ஒன்றியிருந்த வேளை "நான் வந்தது கூடத் தெரியாமல் என்ன நடக்குது!" அவள் திரும்புவதற்கிடையில் வேகவேகமாக ஜன்னலருகே நடந்து வந்தவன், வெளியே எட்டிப் பார்த்தான். அவன் பார்வை போன இடத்தைச் சாதாரணமாக நோக்கியவள், அதிர்ந்து போனாள். அவர்களும் கூட இப்போது தான் இந்தப் பக்கம் திரும்பியபோது இவர்களைக் கண்டார்கள். முகம் நிறைந்த சிரிப்புத் தெறித்தது. அவளுடன் ஏ. எல் படித்த நிஷாந்

தனும், விமலும். அவளும் இப்போதுதான் அவர்களைக் கண்டதாயும், இவ்வளவு நேரமும் பாதையில் தங்கள் பாட்டில் பேசிக்கொண்டிருந்த அவர்கள் இப்போதுதான் எங்களைக் கண்டார்கள் என்று எப்படி இவனுக்குப் புரிய வைப்பது என்று திணறுகையிலேயே அவளது கன்னம் அதிர்ந்தது.

முதன்முதலாக அவள் வாய் திறந்தாள். நீங்களும் ஒரு மனுசப் பிறப்பே? நம்பிக்கையில்லாத. தொட்டதுக்கும் சந்தேகம் பிடிச்ச உங்களுக்கெல்லாம் என்னத்துக்குக் கலியாணமும், குடும்பமும்? இந்த வார்த்தைகள் அவனை மிருகமாக்கின. "ஒண்டும் தராமல் கலியாணம் செய்து போட்டு, இவ்வளவு கொழுப்புக் கதையே?" அவன் முடிக்கு முன்னே "பொறுங்கோ, நாங்கள் வந்து உங்களிட்டக் கேட்டனாங்களே? என்ர பாட்டில படிச்சுக் கொண்டிருந்த என்னையும் கட்டாயப்படுத்தி ... ... இல்லாட்டி இப்ப நான் எங்கேயோ இருந்திருப்பன். இதுவும் ஒரு வாழ்க்கையே?" இவ்வளவு தான் அவள் கேட்டது. தன்னைச் சுட்ட நியாயமான வார்த்தைகளைத் தாங்க முடியாமல் அவளை அடி, அடி என்று அடித்து, உதைத்து விட்டான்.

இந்த அடி உதைகளோடு அவள் வயிற்றில் உருவான இனிய செய்தி கலைந்து போயிற்று. எந்த இளங்குருத்தினால் தான் தன் வாழ்க்கை வளமாகும் என்று நினைத்திருந்தாளோ அது சிதறிப் போனதில் அவள் இதயத்திலும் ஏதோ

ஒன்று கருகிப்போனது. எப்போதுமே. அவளுக்குக் குழந்தைகள் மேல் ப்ரீதி அதிகம். அதிலும், சிறு வயதிலே சர்வாலங்கார பூஷிதையாக "சின்னஞ் சிறுகிளியே, கண்ணம்மா" நடனம் ஆடியபோது 'ஓடி வருகையிலே கண்ணம்மா' என்றதற்கு ஓடி வரும் தன் செல்லக்குழந்தையை வாரி அணைத்து முத்தமிட்டு, அரவணைப்பதை பாவத்துடன் ஆடியபோது எழுந்த கைதட்டல்கள்? நினைக்க நினைக்க அவளுக்குக் கண்ணீர் தான் ஆறாய்ப் பெருகியது.

இவனை விட்டு விலகி விடலாம் என்றாலோ அப்பாவை இழந்த பின் அம்மாவே இரு சகோதரிகளுடனும் மாறிமாறி இருக்கும் போது அவள் யாரிடம் போய் ஒண்டுவது? அதுவும் படிப்புக் கூட முடியாத நிலையில்? சாகலாம் என்றாலும் அவளது தன்மானம் இடம் தரவில்லை. அதற்குப் பிறகு அவள் வாழ்வை வசந்தமாக்க அவள் வயிற்றில் ஒன்றுமே ஜனிக்கவில்லை.

கடந்த இருபத்தொரு வருடங்களாக கொடும் வார்த்தைப் பிரயோகங்களால் தினம் தினம் தீக்குளித்த சீதையாய் வாழ்வை நகர்த்தி வருகிறாள் அன்றைக்கு இறுக்கமாக அடைக்கப்பட்ட ஜன்னல் கூட இற்றை வரை இன்னும் திறக்கப்படவில்லை. யாரோ கூப்பிடும் சத்தத்தால் சிந்தனைத் தொடர் அற வாசலுக்கு வந்தாள்.

நாதனுடன் பணிபுரியும் இருவர் நாதனின் உடலைத் தாங்கியபடி, "வந்து, மனத்தைத் தேத்திக் கொள்ளுங்கோ. ஹார்ட் அட்டாக், ஹொஸ்பிற்றலுக்குப் போவதற்கிடையில்...... என்ன செய்யிறது? வாழுற வயசில" உணர்ச்சிகளே அற்ற முகத்துடன் நின்றிருந்த இவளிடம் ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார்கள் சொன்னது எதுவுமே இவளது காதிலே விழவில்லை.

அவளது உதடுகளில் கீற்றாக முகிழ்த்துச் சிதறி முகத்தில் பரவிய சிரிப்பின் அர்த்தம் அவர்களுக்கும் விளங்கவில்லை. அவர்கள் நிற்பதையே கருதாமல் உறுதியான காலடிகளோடு அவ்விடம் விட்டகன்றவள் நேராக வந்து இறுகிக் கிடந்த அந்த ஜன்னலைப் பாடுபட்.த் திறக்கும் வரை அவள் முகத்திலிருந்த அந்தச் சிரிப்பு மட்டும் மறையவில்லை.

முற்றும்.

# [7]

# மனிதம் என்றும் மரணிப்பதில்லை

''உயிர்களிடத்தில் அன்பு சமர்ப்பணம்'' என்ற வாசகத்தைக் கொண்ட அன்பு இல்லத்தின் முதலாவது ரவுண்டஸ் முடித்த களைப்போடு அமர்ந்து கொண்டேன். எயிட்ஸினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனநிம்மதி தரும் வதிவிடம் தான் அமைதிப் பூங்காவான அன்பு இல்லம். தெரிந்து தப்புச் செய்தவர்கள், தெரியாமல் தப்புச் செய்தவர்கள் அநியாயமாய் வாழ்வினை அழித்துக் கொண்டு மரணத்தைத் தடுக்க முடியாது நாள்களை எண்ணுபவர்கள், யாரோ செய்த தப்புக்காக சாவோடு போராடும் பிஞ்சு பிஞ்சான குழந்தைகள் எல்லோருமே அன்பு இல்லத்தில் அடைக்கலமானவர்கள்.

சாந்தியின் அவலமான சாவு அன்பு இல்லம் முழுவதையுமே உலுக்கி விட்டதென்பது உண்மை தான். சாந்தி எவ்வளவு மென்மையான, அமைதி யான பெண். நிறைமாத வயிற்றுடன் அவள் இங்கே வந்து அடைக்கலம் கேட்டபோதே என் நெஞ்சுக்குள் தீப்பற்றிய உணர்வு. வெளிநாட்டில் இருந்து, வந்தவனுக்கு இவளை மணமுடித்து. வயிற்றிலே குழந்தைக்கு ஐந்து மாதமாகும் வரை யில் எல்லாமே ஓ. கே. தான். ஆனாலும், கருவுற்ற ஏனைய தாய்மாரைவிட இவளது வித்தியாசமான நிலை கண்டு செய்த மருத்துவப் பரிசோதனைகள் சாந்தி எச். ஐ. வி. தொற்றலுக்குள்ளானதை வலி யுறுத்தின. அவளுக்கு, அவனுக்கு, குழந்தைக்கு — மொத்தத்தில் குடும்பமே எயிட்ஸ் குடும்பம். விஷயம் தெரிந்ததும் அவனது அட்ரஸே இல்லை. விஷயம் தெரிந்து அவளைச் சொந்த பந்தம் எல் லாமே ஒதுக்கின. கள்ளமில்லாத அந்த அப்பாவிப் பெண்ணை, குழந்தைத்தனமான இதயம் கொண்ட வளோடு பேசவே பயந்தனர். மலையாக நம்பி யிருந்தவர்கள் எல்லாம் இவள் தான் காரண கர்த்தா என்பது போல் காதுபடவே தூற்றினர். அந்த வேளையில் தான் அவளுக்கு அன்பு இல்லம் அடைக்கலம் கொடுத்தது. எண்ணி ஒரு மாதம் கூட அவள் தங்கவில்லை. நேற்று அவளது பிரசவ தினம். அழகான குழந்தை. ஆனாலும் என்ன? தன் குழந்தை சாவோடு போராடுவதைக் காணச் சகியாமலோ என்னவோ அவள் ஆண்டவனுக்கு சமர்ப்பணமாகி விட்டாள். ஒன்றின் முடிவில் ஒன்றின் ஆரம்பம்?

தலை நிறையச் சுருள் சுருளான நிறையத் தலைமயிர். மணிக்கண்கள். சிறிய செப்பு வாய். குஞ்சு குஞ்சான கை, கால்கள். மெத்து மெத் தென்ற உடம்பு. சாந்தியின் செல்வனைத் தூக்கி நர்ஸின் கைகளில் கொடுக்கையில் எனது கண் களும் அருவியாயிற்று. வாங்கியவளின் கண் களும் நீர் பொழிந்தன. அம்மாவும் இல்லை. அப்பாவும் இல்லை. அவனுக்கென்றே அவர்கள் விட்டுச் சென்ற சொத்து எயிட்ஸ். இது பிரம்மா எழுதிய விதியல்ல. மனிதன் எழுதிய விதி.

நிமிர்ந்த என் கண்கள் சுவரிலே மாட்டியிருந்த அரவிந்தனின் படத்திலே நிலைத்தன. நாங்கள் யாருக்கு என்ன கெடுதல் செய்தோம் அரவிந்தன். மாறாக எத்தனை உயிர்களைக் காத்திருப்போம்? ஏன்? எதற்காக எங்களுக்கு இவ்வளவு பெரிய தண்டனை? எல்லாமே... எ...ல்லாமே சரியாய் இருந்திருந்தால், இப்போது சாந்தியின் குழந்தை போல ஆனால் உங்களின் பிடிவாதம் பிடிக்கும் அழுத்தமான உதடுகளோடு — ஆனாலும் எல் லாமே பிழைத்துப் போயிற்றே? எந்தக் கோணத் தில் சமன்பாடு போட்டாலும் விடை பூச்சிய மாகிறதே?

வியத்தின் போதான இரத்தமிழப்பை ஈடு செய்ய இரத்தம் ஏற்றியபோதே, ஊசி மருந் தேற்றிய போதோ ஏற்பட்ட எச். ஐ. வி. தொற்று என் அரவிந்தன் படித்து, டாக்டராகிய பின் தான் தன்னை வெளிக்காட்டியது. நானும், அரவிந்த

னும் ஒருவரை ஒருவர் நேசித்த காலப் பகுதி. நோய் தன்னை அணு அணுவாய் அரித்த காலப் பகுதியிலும், 'இந்த அன்பு இல்லத்தை உருவாக்க அரும்பாடுபட்டு, தன் இறுதி மூச்சையும் இங்கேயே... அப்போது தொடக்கம் சகலதுமே எனக்கு அன்பு இல்லம் தான். இதுவே என் உலகமாயிற்று. எதையுமே தெளிவாகப் பார்க்க முடியாமல் கண்ணீர் திரையிட்டது.

''மே, ஐ கம் இன்?'' கதவின் வெளியே ஓர் ஆண் குரல். '' எஸ், கம் '' வந்தவனை ஏறிட்டேன். முப்பதிற்குள்ளான வயது. தெளிவான பார்வை. கம்பீரமான தோற்றம். ஆனால், கண்கள் மட்டும் எல்லையற்ற துன்பத்தைத் தேக்கியது போல. அமரச் சொன்னேன். சில விநாடிகளுக்கு விடை கொடுத்தபடி ''என்ன பிரச்சனை?''

''டொக்டர், இங்கே ஒரு வாரத்தின் முன் சேர்ந்த பூரணியைப் பற்றி''... இதென்ன தொடர் பற்ற கதை என்று ஏறிட்டவள் ''நான் யாரையும் வற்புறுத்தி விபரம் கேட்டதில்லை. அவள் சொல்லும் போது சொல்லட்டும். அதோடு அவள் மிக அமைதியான பெண் போலத் தெரிகிறது'' என்று முடித்தேன்.

''முதல் என்னைப்பற்றி உங்களுக்குச் சொல்லி விடுகிறேன் , மேடம், '' என்றவன் சூனியத்தை வெறிப்பது போல இலக்கற்றுப் பார்த்தான். ''பூரணி மிக அமைதியானவள் அல்ல. கலகலப்

பானவள் மேடம். கலகலப்புக்கு, துள்ளலிற்கு, இறைக்கும் சிரிப்பிற்கெல்லாம் மறு பெயர் தான் பூரணி. அவள் வாழ்வில் பட்ட அடிகளும், வேத னையும் தான் நீங்கள் இப்போது பார்க்கும் பூர ணிக்குக் காரணம்'' என்றவன் தொடர்ந்து கொண்டே போனான்.

''நானும், பூரணியும் ஒரே வயதினர். ஒரே வகுப்பு. அவளது பதினெட்டாவது வயதிலே தகப்பனும், அதன் பின் தாயும் மரணிக்க நான்கு தங்கைகளின் பொறுப்பும் இவள்மேல் சுமத்தப் பட்டது. வருமானம் எதுவுமே அற்ற நிலையில் நான்கு தங்கைகளுடன் பூரணி. ''நீ படிக்கிறதை விட்டுட்டு குவைத்திற்குப் போய் உழைச்சு அனுப் புவாய் என்றால் உன் தங்கைகளை நான் கவனிக் கின்றேன்'' சொந்த பந்தம் எல்லாம் தூர விலகிக் கொள்ள தெரிந்தவரின் வாயிலிருந்து உதிர்ந்த தைக் கவனமாகப் பிடித்துக் கொண்டாள் பூரணி. பள்ளிக்கூடம் முற்றிலுமே அதிர்ந்து போயிற்று. ஒரு மாதத்தின் முன் பூரணியின் சம்மதத்தைப் பெற்றிருந்த நான் இடிந்தே போய் விட்டேன். விடை பெறுவதற்கு, இறுதியாக விடைபெற என் னிடம் வந்தவளின் முகத்தில் என்றுமில்லாத வாறான இறுக்கம். ஓரிரு விநாடிகள் மௌனத்தில் கழிய, எனக்காகக் காத்திருப்பதில் அர்த்தமில்லை. நடந்ததை எல்லாம், எல் _ லாவற்றையுமே மறந்து விடுங்கோ, நான் இங்கே திரும்பி வருவதே சாத் தியமில்லை ஜெகன்'' என்றவள் என்னை முழு தாக நோக்கி, அங்கிருந்து நகரும் வரை என்னாலே

வாயே திறக்க முடியவில்லை. அவள் போவதற்கிடையில் எத்தனையோ முறை அவளுடன் தொடர்பு கொண்டேன். சந்தர்ப்பங்கள் அமைந்தும் கூட அவளைக் கதைக்க வைக்க என்னால் முடியவில்லை. தனது செய்கையால் அவளை நான் வெறுத்து ஒதுக்கி, முற்றாகவேமறந்துவிட வேண்டும் என்று பாடுபடுவதை உணர்ந்து கொண்டேன். அதன் பின் என்ன? அவள் போய் விட்டாள்'' என்றான் நீண்ட பெருமூச்சோடு.

''பதினைந்து வருடங்கள், டொக்டர். அவள் அங்கே உழைத்து அனுப்பிய பணத்திலே, நாலு தங்கைகளும் படித்து, இப்போது திருமணமும் செய்து விட்டார்கள் எல்லோருடைய வாழ்க்கையும் நன்றாகவே இருக்கிறது. என்னுடைய பூரணியைத் தவிர'', என்றான் தளதளத்த குரலில்.

''அங்கே வேலை செய்த இடத்தில் அநியாயமாகத் தன்னை இழந்து விட்டாள்.'' என்றவன் மேலே பேச்சைத் தொடர இயலாது தலையைக் கைகளால் தாங்கிக் கொண்டான். நான் அவனைக் குழப்பவில்லை. அவனாகவே தொடரட்டும் என்று வாளாவிருந்தேன் நிமிர்ந்த போது அவனது கண்கள் சிவந்திருந்தன. பதினைந்து வருடங்களின் பின், மீண்டும் இங்கே வந்தாள். நான்கு தங்கைகளுக்கும் நல்ல சந்தோஷம். அவர்களது பிள்ளைகள் இவளை விட்டுப் பிரிவதேயில்லை. இவளில் அவ்வளவு பிரியம்.

வந்து ஓரிரு மாதங்கள் கடந்த பின் தங்கைகள் நாலு பேரையும் கூட்டி வைத்து. தனக்கு எயிட்ஸ் என்று கூறி காரணத்தைக் கூறி அவர்களின் ஆறுதலான வார்த்தையை எதிர்பார்த்தவளுக்கு முதலாவது தங்கை, சொன்னாள், மிக அலட்சியமாக ''உனக்கே இது தெரிந்தும், அங்கேயே செத்துத் தொலைப்பதற்கு இங்கே ஏன் வந்தாய்''? எனக்கே முகத்தில் அறைந்த மாதிரி அவளுக்கு? என் எண்ணங்கள் தொடர ஜெகன் பேச்சைத் தொடர்ந்தான்.

''ஏதோ இவள் தான், இவள் மட்டுமேதான் காரணம் என்றெல்லாம் ஏறுமாறாகப் பேசி, காறித் துப்பாதகுறை. அதற்குப் பிறகு எல்லாமே தலை கீழாய்ப் போனது. நாய் மாதிரி ஓர் அறையில் அடைத்து வைத்து நாயிற்கு எறிவது போல சாப்பாடு — ஒருவரும் இவளை அண்டிப்போவதில்லை. பிள்ளைகளையும் விடுவதில்லை. அதை விடப் பெரிய கதை என்னவென்றால் நால்வரின் குடும்பங்களும் தங்களையும் சோதித்துக் கொண்டனர். இவளோடு பழகியதில் எயிட்ஸ் தொற்றி இருக்குமாம். எவ்வளவு ஈனமான பிறவிகள்? அவளது உழைப்பிலே இவ்வளவுக்கு வந்து விட்டு, அவளை — தாங்கமுடியாமல் தான் பூரணி இங்கே வந்திருக்கிறாள்'' என்றவன் நிமிர்ந்து அமர்ந்து கொண்டான்.

''நான் பி. எஸ். சி மேடம் (...) கல்லூரியில் கற்பிக்கின்றேன்'' என்றவன் தயங்கி விட்டு ''நான்

பூரணியை அழைத்துச் செல்லலாமா டொக்டர்? ''
எனக்கு ஒரே திகைப்பு. ''நீங்கள் என்ன...'' எனக்கு ஆச்சரியத்தில் பேச்சே வரவில்லை. '' எனக்கு நீங்கள் நினைப்பது புரிகிறது, மேடம். ஆனால் நான் இவளுக்காகத் தான் இவ்வளவு காலமும் காத்திருந்தேன் '' ...... — என்றவனை '' ஆனாலும் '' என்று குறுக்கிட '' நீங்கள் சொல்ல வருவது எனககுப் புரிகிறது மேடம். ஆனால் இவ்வளவு காலமும் மிகுந்த வேதனையில் உழன்றவள் இருக்கும் வரையிலும் அமைதியாக, சந்தோஷமாக ...... '' என்றவன் மேலும் தொடர்ந்தான். '' இங்கே அவளுக்கு இந்த இரண்டுமே கிட்டாது என்றில்லை. ஆனால், நான் என் பூரணியை முற்றிலுமாய் ......... என் ஆயுள் முழுவதும் பத்திரப்படுத்தி வைக்க ... ... உங்களுக்குப் புரிகிறதா மேடம்?'' எனக்குக் கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது. ஆதரவாய்த் தலை அசைத்தேன்.

'' எனக்கு இப்போது அம்மாவும், அப்பாவும் இல்லை. மிக நெருங்கியவர்களென்று உறவினர்களும் இல்லை. பூரணிக்கு எந்தக் குறையும் இருக்காது '' என்றவன், என் முகத்திலே எதையோ உணர்ந்தவனாய் மேலே தொடர்ந்தான்.

'' பூரணிக்குப் பாதுகாப்புக்குத்தான் திருமணம். மற்றப்படி, எங்கள் வாழ்வு இரு சிநேகிதர்களின் வாழ்வைப் போலவேதான். பூரணியின்

முகத்தின் சிரிப்பு என்றும் வற்றக்கூடாது. அதற்காக, நான் எதையுமே ......... எதையுமே செய்வேன்'' என்றவனின் கண்களில் நீர் நிறைந்தது. இவன் எவ்வளவு அன்பைத் தான் வைத்திருக்கின்றான்? பதினைந்து வருடங்கள் காத்திருந்து, அவளது நிலை, முடிவு முற்றிலுமாகத் தெரிந்த போதும்? அனுபவப்பட்ட, இந் நிலையைக் கடந்த என் மனம் அவன், அவளுக்காய் வேதனைப்பட்டது.

''பூரணி, சம்மதிக்கமாட்டாள், மேடம் சம்மதிக்கவே மாட்டாள், நீங்கள் தான் எப்படியாவது ......... '' என்று என்னைப் பார்த்து ஏக்கத்துடன் சொன்னான்.

''இல்லை ஜெகன், உங்கள் விருப்பப்படி எல்லாம் நடக்கும். பூரணி உங்கள்ள விரும்பியது, விரும்புவது உண்மையெனின் அவளை எப்படியும் சம்மதிக்க வைக்கிறேன். வருகிற கிழமை உங்களுக்கு முடிவு சொல்கிறேன். வாற சனிக்கிழமை வாருங்கள்'' என்றேன். ''இல்லை மேடம், நான் ஒவ்வொரு நாளும் பூரணியைப் பார்க்க வருவேன். நீங்கள் எப்போதுமே எனக்குச் சொல்லலாம்'' என்றான் அவசரமாக. அதோடு ''இதெல்லாம் நடக்குமா, மேடம்?'' என்று சொல்லொணா வேதனையுடன் கேட்ட அவனை ''ஆண்டவன் இருக்கிறார், ஜெகன்'' என்று அனுப்பி வைத்தேன்.

உலகம் தலைகீழாய் போனாலும், என்னதான் நடந்தாலும் மனிதர் என்று வரைவிலக்கணத்துள் வாழ்வோர் உண்டு. எனவே, இந்த உலகில் மனிதம் என்றும் மரணிக்கப் போவதில்லை. பூரணியிடம் பேச வேண்டியதை மனதுள் ஒழுங்கு படுத்திய படி, அடுத்த ரவுண்ட்ஸிற்காய் எழுந்தேன்.

முற்றும்.

❋ சமூகத்தின் முரண்பாடுகளுக்கும், பெண்கள் மீதான அடக்கு முறைகளுக்கும் எதிரான ஆவேசம் ........

❋ பிறரால் கைவிடப்பட்ட அல்லது அலட்சியப்படுத்தப் பட்ட ஜீவன்களிடம் கருணை சொரியும் மனிதாபி மானம்.. .. ......

❋ விஞ்ஞானத்துறைக் கல்வியினூடாகப் பெற்றுக் கொண்ட உளவியல் ரீதியான அணுகுமுறை ......

❋ தான் காணும் உலகின் ஒவ்வொரு சிறிய அம்சத்தை யும் கூர்ந்து நோக்கும் கலைத்துவம் செறிந்த பார்வை ...........

இவை அனைத்தும் கலந்த தொகுப்புத்தான் " கரை தேடும் அலைகள் "

சின்ன வயதில் கன்னி முயற்சி எனினும் கலைத் திறன் ஆரம்பியின் வயதையும் மீறியது. பேரன், தந்தை யினூடாகத் தொடர்ந்து வரும் கலைமரபு - இதற்குக் காரணமாக இருக்கலாம். இன்னும் தாண்ட எத்தனையோ படிகளும், அனுபவங்களும் வாழ்க்கையில் உள்ளன. நம்பிக்கையோடு எதிர்பார்க்கலாம்.

கவிஞர் ம. பா. மகாலிங்கசிவம்
B. A. ( Hons )
பொறுப்பாசிரியர் - ஸ்கந்தா தமிழ் மன்றம்

30 - 08 - 2000